JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER



பரலோகராஜ்யம்
கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது!

# ஜீவ மன்னா

அனுதினமும்


2015 ஜூலை

46 வது வெளியீடு

## நான் ஜீவ விருட்சமாக வளருவது தேவக்கிருபையே!

# ஆத்மீக வெற்றியின் இரகசியங்கள்!

அன்பார்ந்தவர்களே! சில தேவ பிள்ளைகள், போதகர்கள் சபைகளை வழிநடத்தும் தேவ அடியார்கள் உங்கள் ஊழியம் இவ்வளவாக வளர்ச்சியடையக் காரணம் என்ன? எங்களுக்கும் சொல்லித் தருவீர்களா? என பல சந்தர்ப்பங்களில் என்னிடம் வினாவியுள்ளனர். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல தேவ ஆவியினாலேயே ஆகும் என்ற சேனைகளின் கர்த்தர் கூறிய வசனத்தின்படி என்னாலோ வேறு யாராலும் அல்ல இந்த உன்னத வளர்ச்சி தேவனுடைய இரக்கத்தினாலே ஏற்பட்டது என்று கூறவேண்டும். எங்கள் சபைக்கூடாக கடைபிடிக்கும் ஜெப ஒழுங்கு முறைகளைப் பற்றி உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். இந்த ஜெப ஒழுங்கு முறைகளை வாசித்து வெற்றிகரமான ஊழியத்தை நடத்த என்னுடைய உள்ளப் பூர்வமான வாழ்த்துக்கள்.





01. முழு நேர ஊழியர்களோடு வாரத்தில் ஏழு நாட்களும் அதிகாலை 4.00 மணி முதல் 6.00 மணிவரை 2 மணி நேர விஷேட ஜெபம்.

02. பகுதி நேர, முழு நேர ஊழியர்களோடு திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காலை 7.30 முதல் 9.30 வரையும் மாலை 2.00 மணி முதல் 4.00 மணி வரை 4 மணித்தியாலங்கள் இலங்கையில் அனைத்து ஆத்மீக சபைகளுக்காக, தேசத்திலே ஆத்மீக எழுப்புதல் உருவாக்கும்படியாக இடைவிடாது ஜெபங்களை ஏறெடுக்கின்றோம்

03. புதன் கிழமையும், வெள்ளிக்கிழமையும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வல்லமையான உபவாசம் ஜெபம். ஏறெடுக்கப்படும். அதற்கு 40 முதல் 75 வரையிலான விசுவாசிகள் கலந்துக் கொள்வார்கள்.

04. ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளி காலை 7.00 மணி முதல் மறுநாள் காலை 5.00 மணி வரை 24 மணி நேர உபவாச ஜெபம் நடக்கும்.

05.தினமும் இரவு 7.00 முதல் 8.00 மணி வரை ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்படும்.




06. SMS சேவையில் எமக்கு கிடைக்கின்ற ஜெப விண்ணப்பங்களுக்காக மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரையிலான ஜெப நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கப்படும்.

07. எமக்கனுப்பும் கடிதங்களில் ஜெப விண்ணப்பங்களை திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காலை, மாலை ஜெபங்களில் தேவ பாதத்தில் வைத்து ஜெபிக்கின்றோம்.



08. தொலை பேசி அழைப்பு ஜெப விண்ணப்பங்களுக்காக 24 மணி நேரமும் ஜெபம் ஏறெடுக்கப்படும். ஒரு நாளைக்கு 200 பேருக்கு அதிகமானோர் தொலை பேசிக்கூடாக ஜெபித்துக் கொள்கிறார்கள்.

தயவு செய்து அட்டைப்படத்தின் உட்புறத்தில் பார்க்கவும்.

# மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

09 JUL 2015

## ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே.

## தேவ வசனங்கள் ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கின்றது!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன். ஜீவ மன்னா தின மஞ்சரியின் 46 வது வெளியீட்டுக் கூடாக உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வளவு காலமாக இந்த தேவ இராஜ்ஜியத்தின் காரியத்தை தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு வர தேவ அநுக்கிரகம் எம்மோடு கூட இருந்தபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

ஜீவ மன்னா தின மஞ்சரியின் வாசக்கக் கட்டணங்கள், சந்தோஷக் காணிக்கைகள், ஜெப ஒத்தாசைகள் என்பவற்றால் எம்மைத் தாங்கிய உங்கள் அனைவருக்கும் என் இதயப் பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும். நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் போது அவருடைய உள்ளம் மகிழுகிறது சுவிஷேசம் உலகெங்கும் அறிவிக்கப்பட ஏதுவாயிருக்கிறது. 2 கொரிந்தியர் 9:7இல் பவுலடியார் கூறிய வண்ணம் உற்சாகமாய்க் கொடுங்கள்.

தேவனின் வார்த்தைகள் ஆவியும், ஜீவனுமாய் இருக்கிறது. ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறது. உலர்ந்த எலும்புகளை உயிரடையச் செய்கிறது. இம்முறை எமது ஜீவ மன்னா தின மஞ்சரியில் ஆத்மீக வளர்ச்சியையும், சரீர வளர்ச்சியையும் குறித்தான காரணங்களை எழுதியுள்ளோம். இவைகளை நான் உங்களுக்கு எழுதியுள்ள காரணங்கள் என்பது மாத்திரமின்றி எங்கள் தேவ சபைக்குள் நாம் ஜெபங்களை தவறாது உறுதியுடன் நடைமுறைப்படுத்தி வருவதனால் தேவன் எமது சபையை ஆசீர்வதித்து வருக்கின்றார் என்பதை உறுதியாகக் கூற முடியும். மதிப்பிற்குரிய சபைப் போதகர்களே! உடன் ஊழிக்காரர்களே, தேவப் பிள்ளைகளே நீங்களும் உங்கள் சபைக்குள், தேவ ஊழித்திற்குள் ஆத்மீக வளர்ச்சியை பெற்றுக் கொள்ள இந்த ஜெப ஒழுங்கு முறைகளின்படி ஜெபங்களை இடைவிடாது செய்து வருவீர்களெனின் தேவ இராஜ்யத்தில் உங்களுக்குரிய பங்கை நீங்கள் நிறைவேற்றுகின்ற போது தேவன் மகிமையடைகிறார். ஜெப ஜீவியத்தினை தொடர்ந்திட வாழ்த்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| மனித வாழ்வின் தீபமான | தேவவசனம் | இப்படிக்கு |
| மனித வாழ்வை உயிர்ப்பிக்கும் | தேவவசனம் | இயேசு கிறிஸ்துவுக்குள் |
| மனித வாழ்வை தூய்மைப்படுத்தும் | தேவவசனம் | போதகர் ஏ.ஜே.ஜோசப் |
| மனித வாழ்வில் ஜீவனைக் கொடுக்கும் | தேவவசனம்! | இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம் |

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

❁❁❁

ஜீவ மன்னா

ஜூலை **01**
புதன்

# நாம் செய்யும் நன்மைகளின் நிமித்தம் எம்மை மேன்மையடையச் செய்யும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
1 நாளாகமம்
அதி: 14 - 15

**"நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ?..."** (ஆதியாகமம் 4:7)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் மாதத்தின் **முதல் நாளான இன்றைய நாளில் தேவனின் விஷேசித்த கிருபை, இரக்கம், அன்பு உங்களை வழிநடத்துமாறு தேவனிடம் விண்ணப்பம் பண்ணி வாழ்த்துகின்றேன்.** நீங்கள் இன்றைய நாளில் அதிகாலை முதன் முதலாக தேவ சமூகத்தில் ஜெபம் செய்து நாளை ஆரம்பியுங்கள். ஏனென்றால் நீங்கள் முகம் கொடுக்கும் வேண்டிய **அனைத்து பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் துணிகரமாக முகம் கொடுத்து வெற்றிபெற தேவன் உறுதுணை புரிந்திடுவார்.**

தேவ பிள்ளைகளே! சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கள் சிறுமைப்பட்டு வேதனையுறும் போது நான் ஜெபிக்காதபடியால் எனக்கு இப்படி நேர்ந்தது என்று எண்ணக்கூடும். அது இயற்கை ஏனெனில் நீங்கள் **அதிகாலையில் தேவனது புது கிருபையை பெற்றுக் கொண்டீர்களாயின் உங்களுக்கு எந்த ஒரு சவாலுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வெற்றி பெற்றுக் கொள்ள முடியும்.** நீங்கள் சிறுமைப்பட நேரிடாது. மேலே கூறப்பட்ட **ஆதியாகமம் 4:7**இல் **"நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?"** எழுதப்பட்டுள்ளது. நன்மை என்றால் என்ன? என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். தேவ வசனம் கூறுகின்றதாவது மீகா 6:8இல் மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ் செய்து இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக **மனத் தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் என்று கூறுகின்றது.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொரு நாளும் **காலையில் ஜெபம் செய்து தேவனது வசனத்திற்கு கீழ்படிந்து வாழ்கின்ற போது அது தேவன் முன்னிலையில் மிக அருமையான செயலாகக் காணப்படுகின்றது.** அது நன்மையான செயலாகையால் அதற்கு பலனாக **தேவன் உங்கள் மன்றாட்டு ஜெபங்களை ஏற்றுக் கொண்டு விண்ணப்பங்களுக்கு பதில் தருவார். சங்கீதம் 62:12**இல் "கிருபையும் உம்முடையது ஆண்டவரே தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்". என்று எழுதப்பட்டுள்ளதால் நீங்கள் எப்பொழுதும் நன்மையானவைகளை மாத்திரம் சிந்தியுங்கள். மிகவும் சிறிய பொய் அல்லது பிழை கூட உங்களால் இழைக்கப்படாதபடி விழிப்போடு நடந்துக் கொள்ளுங்கள் மனிதர்களின் தீமையான செயல்களில் பங்கு பெறாதீர்கள். அப்பொழுது எப்போதும் தேவன் உங்களை ஏற்றுக் கொள்வார். **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நாங்கள் நன்மையானவைகளை செய்கின்ற போது நீங்கள் என்னை ஏற்றுக் கொள்கிறீர்கள். ஆகையால் எப்போதும் உங்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்ள நன்மையானவைகளை மாத்திரம் செய்ய தயை செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." (எபேசியர் 2:10)

ஜீவ மன்னா

ஜூலை **02**
வியாழன்

# ஆத்மீக யுத்தத்தை பண்ணுகிறவர் நீங்கள் அல்ல தேவனேயாவார்!

இன்றைய வேதவாசிப்பு

1 நாளாகமம்
அதி: 16 – 17

**"அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்."** (சங்கீதம் 46:9)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! நீதியால் நிறைந்திருக்கும் வலக்கரத்தையுடையவரும், சதாகாலங்களிலும் நம்முடைய **தேவனும், மரணபரியந்தம் எம்மை வழி நடத்தப் போகிறவருமான இயேசு எனும் வல்லமையான நாமத்தினால் இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** ஆத்மீக தேவ பிள்ளைகளான நாங்கள் உலகில் வாழும் மனிதர்களைப் போலவே சரீர பிரகாரமாகவும் **மனப் போராட்டங்கள் நிமித்தமாகவும் போராடி வாழ வேண்டியுள்ளமையால் வாழ்க்கையைக் குறித்து பயப்படாதீர்கள், கவலைப்படாதீர்கள்.** சில வேளைகளில் உலக மனிதரைப் பார்க்கிலும் ஆத்மீக பிள்ளைகளான எமக்கு அதிகமான சரீர பிரகாரமாகவும் மன சஞ்சலங்களும், போராட்டங்களும் ஏற்படுகின்றதென்பதை உணர்ந்து அவைகளுக்கு முகம் கொடுங்கள்.

தேவ பிள்ளைகளே! மேற்கூறப்பட்ட தேவ வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அவர் **'பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப் பண்ணுகிறார் என்று.'** அதன் கருத்து என்னவென்றால் பூமியில் ஏற்படுகின்ற **யுத்தங்கள் மட்டுமல்ல எங்கள் உள்ளத்தில் ஏற்படுகின்ற போராட்டங்களையும் அகற்றி நிலையற்று போக கிரியை செய்ய அவரால் முடியும் என்பதேயாகும். ஆகையால் உள்ளம் கலங்காதிருங்கள்!** ஆனாலும் ஆத்மீக பிள்ளைகளான எமக்கு எங்கள் ஆவிக்குரிய போராட்டமான வாழ்க்கையில் யுத்தம் செய்ய நேரிடுவது கண்களுக்குத் தெரியாமல் **அரூபியாக கிரியை செய்யும் அந்தகார வல்லமைகளோடு ஆகும்.** அப்படியான அந்தகார வல்லமை எங்களுக்கு விரோதமாக குடும்பத்தாருக்கூடாக, நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், சுற்றத்தார் என்பவர்களுக்கூடாக பலவிதமாக செயல்படலாம். ஆனாலும் அவ்வித சந்தர்ப்பங்களில் உங்கள் உள்ளத்தில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருங்கள்.

தேவ பிள்ளைகளே! உங்களுக்கேற்படுகின்ற போராட்டங்களின் போது மாம்சரீதியாக கிரியை செய்யாதீர்கள். **உங்கள் காரணங்களை தேவன் பாதத்தில் வைத்து ஜெபியுங்கள். "இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல. யூதா மனுஷரே எருசலேம் ஜனங்களே! நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்."** என்று **2 நாளாகமம் 20:17**இல் காண்கிறோம். ஆகையால் நீங்கள் தேவனை நோக்குவீர்களானால் தேவன் யுத்தத்திற்கு முடிவைத் தருவார். உங்கள் பரிசுத்தத்தின் நிமித்தமும் உங்கள் நீதியான வாழ்வின் காரணமாகவும் தேவன் உங்களை விடுவிப்பார். நீங்கள் தேவனை நோக்கி விசுவாசத்தோடு தேவனிடம் ஒத்தாசை கோருகின்ற வேளை தேவன் உங்கள் ஆத்மீக யுத்தத்திலிருந்து மீட்டுக் கொள்வார். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் என்னை ஆத்மீக யுத்தத்திலிருந்து காத்துக் கொள்வதால் ஸ்தோத்தரிக்கின்றேன். என்னுடைய உள்ளத்தில் போராட்டத்தில் ஏற்படுகின்ற ஆத்மீக யுத்தத்திலிருந்து என்னை மீட்டுக் கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது."
(2 நாளாகமம் 20:15)

ஜீவ மன்னா
ஜுலை 03 வெள்ளி

## எல்லாப் பயத்துக்கும் நீங்கலாக்கி முன்னோக்கிக் கொண்டு செல்லும் கர்த்தர்!

இன்றைய வேதவாசிப்பு
1 நாளாகமம் அதி: 18 – 19

**"நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்."**
(சங்கீதம் 34:4)

அருமையான தேவ பிள்ளைகளே! எங்கள் விண்ணப்பங்களுக்கு மேலாக பதில் கொடுக்கும் ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.** இன்றும் வழமையைப் போல அதிகாலையில் தேவனின் சமுகத்தில் அமர்ந்து ஜெபம் பண்ணி முடிவுரும் தருவாய் வரைக்கும் நீங்கள் முகம் கொடுக்க நேரிடுகிற அனைத்து சவால்களுக்கும் பயமில்லாது முகம் கொடுக்க தேவன் **உங்களை பெலத்தினாலும், தைரியத்தினாலும் இப்பொழுதும் நிறைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை ஆதலால் பயப்படாதீர்கள்.**

தேவ பிள்ளைகளே! உண்மையிலேயே **நீங்கள் மிகவும் அதிரஷ்டக்காரர்கள்!** ஏனென்றால் அருபியாகயிருந்து உங்களுக்கு ஒத்தாசை புரிகின்ற உங்களுக்குத் துணையாக இருக்கின்ற தேவனைக் குறித்து அறிகின்ற அறிவைப் பெற்றிருக்கின்றீர்கள். மேலே கூறப்பட்ட **சங்கீதம் 34:4**இல் நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவி கொடுத்து என்னுடைய **எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார் என்று எழுதப்பட்டுள்ளது.** உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களது வாழ்வில் பலவிதமான சோதனைகள் வருகின்றன. ஆனாலும் **எமது தேவனானவர் திராணிக்கு மேலதிகமாக சோதனைகள் வர அனுமதிக்கமாட்டார்.** தேவன் எம்மால் தாங்க முடியாத சோதனைகளுக்கு இடமளியாததோடு; சோதனையை சகித்து அதிலிருந்து மீண்டுமாக தப்பித்து வெளியில் வரவும் வழிகளை அமைத்துத் தருவார்.

தேவ பிள்ளைகளே! மனிதர்களுக்கு சோதனைகள் எதிர் கொள்ளும் வேளைகளில் முகம் கொடுக்க முடியாது விட்டு விலகி ஓடி விடுகிறார்கள். சில வேளைகளில் அவைகளுக்குப் பயந்து வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொள்ளும் மனிதர்களுமுண்டு ஆனாலும் **ஆத்மீக பிள்ளைகளான நாம் சோதனைகள் வரும் போது அவைகளைக் கண்டு பயந்து சோர்வடையக் கூடாது.** பிரதான தேவ வசனத்தில் கூறப்பட்டவாறு சோதனைகள் நேரிடும் போது அதிகமாக தேவனின் முகத்தைத் தேடி தேவனின் பெலத்தை பெற்றுக் கொண்டு அவைகளை எதிர்த்து முகம் கொடுக்க வேண்டும். அப்படியே **எமது திராணிக்கு மேலாக தேவன் சோதனைகளை அனுமதிக்க மாட்டார்.** அவைகளை மேற் கொள்ள தேவன் பெலன் கொடுப்பதோடு சோதனைகளின் போது அவரைத் தேடுகையில் தேவ்ன் எமக்கு பதில் கொடுத்து அதிலிருந்து மீளுவதற்கு பாதை காட்டுவார். **சோதனைகளை எதிர்த்து நிற்க தேவனுடைய முகத்தைத் தேடுங்கள். மீட்பைப் பெறுவீர்கள். வெற்றியின் மன மகிழ்ச்சியான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் முகத்தைத் தேடுகின்ற போது நீங்கள் என் பயத்தை அகற்றுகின்ற தேவனாவீர்கள். இன்றும் நான் உங்கள் பாதத்தில் இவ்வாறாக ஜெபிக்கின்றேன். என் வாழ்வில் இருக்கின்ற அனைத்து பயங்களையும் அகற்றி விடுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்." (சங்கீதம் 18:30)

ஜீவ மன்னா

ஜுலை 04

சனி

# தேவ சித்தம் உங்களுக்குள் நிறைவேறுவது எப்படி?

இன்றைய வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 20 - 21

**"இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது."** (பரி.யோவான் 4:34)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாய், அவரால் அன்பு கூருகிறவர்களாய் இருக்கும் **உங்கள் அனைவருக்கும் இன்றைய நாளில் சகலமும் நன்மையாக நடக்குமென்று இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** தேவ பிதாவானவர் தனது சொந்த ஒரே பேறான திருக்குமாரனை இவ்வுலகிற்கு எமக்காக அனுப்பி சிலுவைப் பாடுகளால் தன்னையே எமக்களிக்க சித்தம் கொண்டதோடு **எம்மை அளவுக்கதிகமாக நேசிப்பதாலும், சதாகாலமும் எம்மோடு இருப்பதாலும் நாம் ஆசீர்வாதம் பெற்றவர்கள்.** அது மாத்திரமின்றி எங்கள் ஆவிக்குரிய பயணத்தைச் சரியாக முன்னோக்கிக் கொண்டு செல்ல எங்களுக்கு வழிகாட்டும்படியாக **தேவன் பரிசுத்த ஆவியானவரை எமக்கு தந்தருளியிருக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! தேவக்கிருபையிலே சுவீடனுக்குச் சென்று அங்கே தேவ ஆராதனைகள் நடத்த அழைப்பு கிடைத்துள்ளது. முன்பொரு முறையேனும் அந்நாட்டுக்குக் கடந்து செல்லவில்லையெனினும் நான் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால் நான் அங்கே விமான நிலையத்தில் இறங்கி என்னை அத்தேசத்திற்கு அழைத்தவர்களை சந்தித்தது முதல் மீண்டுமாக இலங்கை தேசத்திற்கு கடந்து வரும் தருணம் வரை அவர்கள் என்னை அழைத்தமையால் அங்கு எல்லா தேவ ஊழியங்களிலும் போதுமானவரை எனக்கு உதவி ஒத்தாசை புரிந்து எனக்கு துணை நிற்பது அவர்களே, ஆகையால் **மாம்ச மனிதனாக பிறந்த எம்மை தம்மண்டை அழைத்து அளவற்ற விதமாக தனது ஆவியானவரை எமக்குத் தந்து எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் அருமையான திட்டங்களை நடைமுறைப்படுத்த தேவன் கிரியை செய்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! தேவனின் உன்னதமான அழைப்பைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் சில வேளைகளில் **எங்கள் உள்ளம் குழம்புவதற்கு இடமளித்து தேவனின் வசனத்திற்கு மாறாக நடப்போம்.** ஆனாலும் மேற்கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் இயேசுகிறிஸ்து கூறியதை "**நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் பலவிதமான காரண காரியங்களை எண்ணி உங்கள் உள்ளத்தை குழப்பிக் கொள்ளாதீர்கள். பூமிக்குரிய காரியங்கள் ஒன்றுக்கொன்று விரோதமானவைகள். ஆனாலும் **அவைகளை நினைத்து கலங்காதீர்கள்**! இயேசுகிறிஸ்துவுக்குள் வாசம் பண்ணிய தேவ ஆவியானவர் உங்களுக்குள்ளும், எனக்குள்ளும் வாசம் பண்ணுவதால் தேவனின் விருப்பத்தின் பேரில் வாழவும், **தேவன் எமக்குள் கிரியை செய்யவும் எம்மை ஏவுகின்றார். ஆகையால் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள். வெற்றிகரமான நாள்**!

ஜெபம்

என் தேவனனே! உங்கள் குமாரனை இயேசுவுக்கூடாக உங்கள் விருப்பத்தை இப்பூமியில் நிறைவேற்றினீர். இன்றும் அவ்வண்ணமாக உங்கள் விருப்பத்தை இப்பூமியில் நிறைவேற்ற நீங்கள் எனக்கு ஏவுதல் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." (பிலிப்பியர் 2:13)

ஜீவ மன்னா

ஜூலை 05 ஞாயிறு

## உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 22 – 23

**“நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.”** (ரோமர் 12:2)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் அழைக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தமாக்கப்பட்ட~வர்களாயும் ஆரோக்கியமான வசனங்களைப் பேச தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாயும் வாழும்படியாக இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழுகின்ற **சுமார் 700 கோடிக் கணக்காக** பலவிதமான ஜாதிகளின் மத்தியில் பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவரின் பிள்ளைகளாக எங்களைத் தெரிந்துக் கொண்டமை ஆச்சரியமல்லவா? அப்படியே அவரின் குமாரனான இயேசுகிறிஸ்துவை எங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்ட நாள் முதலாக எங்கள் வாழ்வில் **புதிய மாற்றங்கள் நிகழத் தொடங்கியதல்லவா?**

தேவ பிள்ளைகளே! **“என்னுடைய மகனே உன் இருதயத்தை எனக்குத் தா”** என தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் எங்கள் இயேசுகிறிஸ்துவை **நாம் ஏற்றுக் கொண்ட முதல் நாள் தேவன் எங்கள் இருதயத்தில் வாசம் பண்ணத் தொடங்கி விடுவார்.** அப்பொழுது அவரது பிரியத்தின்படி எம் உள்ளத்தை ஆளுகை செய்து எம்மை முழுமையாக மாற்றுவாராக! மேலே கூறிய **ரோமர் 12:2இல் “பவுலடியார் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்றாகும்.** எங்கள் இயேசுவைக் குறித்து அறியாத காலத்தில் நாங்கள் இப்பிரபஞ்சத்திற்குரியவராக வாழ்ந்தோம். எப்படியெனின் நாம் **ஒவ்வொருவரும் எங்கள் சுயத்தை மாத்திரம் கருதி அதற்காக சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம்.** அதற்கு விரோதமாக செயல்படுகின்ற மனிதர்கள் மேல் வைராக்கியங் கொண்டு அநியாயமாகவும், அக்கிரமாகவும் செயல் புரிந்ததோடு தமது சுய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் முற்பட்டு வாழ்ந்துக் கொண்டிருந்தோம்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்!** தேவ பிதாவானவரின் விருப்பத்துடனும், சித்தத்துடனும் அழைக்கப்பட்ட **நாம் புத்திர சுவீகாரத்தைப் பெற்று புதிதாகி மறுரூபமாக்கப்பட்டுள்ளோம்.** ஆகையால் உலகப் பிகாரமான பழைய உள்ளம் அப்புறப்படுத்தப்பட்டு **புதிய உள்ளத்தைப் பெற்றுக் கொள்ளும் வரப்பிரசாதத்தைப் பெற்றுள்ளோம். தேவனின் வசனத்திற்கமைய நாங்கள் ஜீவிப்போமானால் மாத்திரம் எங்களது உள்ளத்தை பரிசுத்தமாகவும், நீதியாகவும் வைத்துக் கொள்ள முடியும்.** ஏனென்றால் தேவ வசனத்திற்கூடாக எங்கள் உள்ளம் பரிசுத்தமாக்கப்படும். ஆகையால் தேவனின் சமூகத்தில் ஜெபித்து உங்கள் உள்ளத்தை புதிதாக்கி மறுரூபமாகி அவரது **ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நான் உங்கள் புத்திர சுவீகாரத்தின் ஆவியை பெற்றுக் கொண்ட நாள் முதல் நீங்கள் எனக்குள் வந்து வாசம் பண்ணுகிறீர்கள். உலகத்தை நோக்கிய எனது உள்ளத்தை புதிதாக்கினீர்கள். என்னை மறுரூபமாக்கினீர்கள். அதற்காக ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“...பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.” (கொலோசெயர் 3:9,10)

ஜீவ மன்னா

ஜூலை 06
திங்கள்

# தேவனின் முகப் பிரகாசத்தில் எமக்கு இரட்சிப்பு உண்டு!

இன்றைய வேதவாசிப்பு
1 நாளாகமம் அதி: 24 – 25

**“...நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், உம்முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது.”** (சங்கீதம் 44:3)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய நாள் உங்கள் வாழ்வில் நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய பிரச்சினைகளுக்கு தேவன் பதில் கொடுக்கும் நல்ல நாளாக உதயமாகட்டுமென வாழ்த்துகின்றேன்.** தேவனான இயேசுகிறிஸ்து எங்கள் மீட்பராவார். இயேசுகிறிஸ்துவை எங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்ட நாள் தொடங்கி **எங்கள் பாவங்களிலிருந்து மட்டுமன்றி அனைத்து பலவீனங்களிலிருந்து, அடிமைத் தனங்களிலிருந்து எங்களைத் தேவன் மீட்டுக் கொண்டார்.**

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 44:3**இல் குறிப்பிடப்படுகின்றதாவது **“நீர் அவர்கள் மேல் பிரியமாயிருந்தபடியால் உம்முடைய வலதுகரமும், புயமும் உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது.”** அதன் விளக்கம் என்னவெனின் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் அனைத்து இன்னல்கள், உபத்திரவங்கள், சவால்கள் இவைகளின் போது எங்களை மீட்டிடுவார் என்பதாகும். **ஏனெனில் விஷேடமாக தேவனின் முகத்தை தேட வேண்டியது நாம் தேவனோடு ஜெபம் செய்து பேசுகின்ற வேளையிலேயே, வேறு எந்த வழியிலும் அல்ல.** ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தினமும் இடைவிடாது, கருத்தோடு ஜெபத்தில் தேவனின் முகத்தைத் தேடுவது மிக அவசியமானாதாகும்.

தேவ பிள்ளைகளே! **தீர்க்கதரிசியான மோசே சீனாய் மலையில் 40 தினங்கள் இராப்பகலாக தேவ சமுகத்தில் காத்திருந்தார்** என்பது தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் பிறகு சீனாய் மலையிலிருந்து இறங்கி இஸ்ரவேல் ஜனங்களுக்கு மத்தியில் வரும் போது தேவன் பேசிதனாலே மோசேயின் முகம் பிரகாசித்தது என்பதனையும் ஆரோனும் **இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயை பார்க்கும் போது அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள் என்பதனையும் யாத்திராகமம் 34:29,30** வசனங்களில் வாசிக்கின்றோம். மோசே தேவனோடு பேசினதாலே அவரது முகம் பிரகாசித்ததெனின் தேவனது முகப் பிரகாசம் எவ்வண்ணமாக காணப்பட்டதென்பதை நினைத்துப் பார்க்க முடியாது. ஆகையால் ஜெபத்தில் தேவனின் முகத்தைத் தேடுகின்ற யாவருக்கும் **அவர்களது பிரச்சினைகள், நோய்கள், உபத்திரவங்கள் என்பவற்றிலிருந்து விடுதலை, மீட்பு கிடைக்கும். நீங்களும் தேவனின் முகத்தை அனுதினமும் தேடி வாழ்வில் ஜெயம் பெறுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! என் மேல் பிரியமாயிருப்பதால் ஸ்தோத்தரிக்கின்றேன்.
உங்கள் முன்னிலையில் கீழ்படிந்து வாழ்வதோடு தினமும் ஜெபத்தில்
உங்கள் முகத்தைத் தேட தயை செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

“உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.” (ஏசாயா 55:3)

# மனம் திரும்பியவர்களுக்கு தீங்கைச் செய்யாமல் மன்னிக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 26 – 27

**"நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்."** (எபிரேயர் 12:6)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றும் உங்களை ஆசீர்வாதங்களால் நிறைந்த, சந்தோஷம், சமாதானம் நிறைந்த மகிழ்ச்சிகரமான நாள் உதயமாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** இவ்வுலகத்தை படைத்த தேவன் எங்கள் தேவ பிதா என்பதால் **நாம் அதிர்ஷ்டக்காரர்கள்!** ஆவோம். ஏனென்றால் கடல் அலைகள் பூமியை நோக்கி வராதபடி அலைகளுக்கு வரையறை வகுத்தவர் எங்கள் தேவனாவார். அப்படியானால் எல்லா சிருஷ்டிப்புக்களின் மத்தியில் மிகவும் அருமையாக, உன்னத படைப்பாக தேவனின் சாயலாகவும், சமனாகவும் படைத்திருக்கும் தேவன் **எங்களைக் குறித்து எவ்வளவு கருத்தாக இருக்கிறார்? என்பதை நினைத்துப் பாருங்கள்.**

தேவ பிள்ளைகளே! தேவனின் எல்லா கிரியைகளும் மிகவும் ஆச்சரியமானவைகள் ஆகும். உதாரணமாகக் சமுத்திரத்தில் உருவாகின்ற பேரலைகளைக் குறித்துச் சற்று சிந்தித்துப் பாருங்கள். **நடுக்கடலிருந்து புறப்படுகின்ற பேரலைகள் ஓய்வே இல்லாதபடி தொடர்ந்து கரையை நோக்கி வருகின்றன.** ஆனாலும் நடுக்கடலில் பெரிய அலையாக புறப்படுகின்ற போது **கடல் எல்லை நோக்கி வெளியே செல்வதில்லை** கடற்கரை எல்லையில் அதன் வேகம் குறைந்து விடுகின்றதோடு சிறிய அலையாகி விடுகின்றது. நாங்கள் கடலை நோக்கிப் பார்க்கின்ற போது **அது பெரிய அற்புதமான** படைப்பென்பதை எமக்கு விளங்கிக் கொள்ள முடியும்.

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனானவர் பாவத்திற்குத் தண்டனை கொடுக்கின்ற தேவனானவர். ஆனாலும் தன்னால் தெரிந்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கு தகப்பன் தன் பிள்ளைகளை தண்டிப்பது போல **அவர்களது தீமையான காரியங்களைத் தண்டிப்பார். நீங்கள் சிட்சிப்பை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். "தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சிப்பு உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசியின் பிள்ளைகளாயிருப்பீர்களே"** என்று **எபிரேயர் 12:7,8ம்** அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் **நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்!** நீங்கள் தேவனுக்கு கீழ்படியும் போது தீங்கான செயல்களை விட்டு விலகும் போது தண்டியாதிருப்பார். **எரேமியா 18:8**இல் தேவன் கூறுவது இதுவேயாகும். **தீமைகள் எம்மை அணுகாது இரத்தக் கோட்டைக்குள் வைத்துப் பாதுகாக்கும் தேவன் நம்மோடிருக்கிறார். வெற்றிச் சிறந்த நல்நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்களை நேசிக்கிற யாவரையும் தண்டித்து சிட்சிக்கிற தேவன் நீங்கள் ஆவீர்கள். நான் உங்கள் சிட்சிப்பின் மூலமாக மனம் மாறியுள்ளேன். நீங்கள் என்னை மன்னியுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்." (எபிரேயர் 12:6)

ஜீவ மன்னா

ஜூலை **08**

புதன்

பாவச் சிந்தனைகள் வராதபடி தேவ வசனங்களை இருதயத்திற்குள்ளே காத்துக் கொள்ளுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 28 – 29

**"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்."** (சங்கீதம் 119:11)

அருமையான தேவ ஜனங்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவரை முழு இருதயத்தோடும் தேடும் நீங்கள் பாக்கியவான்கள் என இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** உலகில் எல்லா மனித ஜாதிகளின் மத்தியில் தனது சொந்த ஜனங்களாக உங்களையும், என்னையும் அழைத்துக் கொண்ட தேவ பிதாவானவரின் அளவற்ற கிருபை இன்றும் எங்கள் மீது நிலைத்திருப்பதனால் நாம் யாவரும் ஒவ்வொரு நிமிடமும் அவரது துணையையும், உதவிகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக் கொண்டு **அவரால் வழி நடத்தப்பட்டு முன்னோக்கிச் செல்கிறோம். தேவனே கிரியை செய்பவராக இருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **சங்கீதம் 119:11**இல் குறிப்பிடப்படுகின்றதாவது, நான் உமக்கு விரோதமாக பாவஞ் செய்யாதபடிக்கு **உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். என்றாகும்.** மனிதர்களாகிய நாம் மிகவும் பெலவீனர்களாவோம். எமது பெலவீனங்களில் எங்களை கிட்டிச் சேர்ந்து எங்கள் ஆத்துமாவில் காணப்படும் **அனைத்து பெலவீனங்களையும் நிர்மூலமாக்கி எங்கள் ஆவியை பெலப்படுத்தி வல்லமையாக்கவும் தேவன் கிரியை செய்கின்றார்.** விஷேடமாக இன்றைய நாளில் கூறுவது எங்கள் பெலவீனங்களில் தேவ வசனத்திற்கூடாக எங்களை பெலப்படுத்துவதைக் குறித்ததாகும். நாங்கள் கேட்கிற, வாசிக்கின்ற தேவ வசனங்கள் **எங்கள் உள்ளத்தில் நிலையாக உறுதியாக நிற்க வேண்டும்.** ஏனென்றால் நாம் சோதனைகளுக்கு முகங் கொடுக்குமிடத்து நாங்கள் சோதனையில் இடறி வீழ்ந்து விடாதபடி நாங்கள் பாவங்கள் செய்யாதபடி **தேவ வசனமே எமக்கு வழிகாட்டும் தீபமாக செயல்படுகின்றது.**

தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தை வாசித்து அதை எங்கள் உள்ளத்தில் நிலையாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் நாங்கள் சோதனைகளுக்கு முகங் கொடுக்கின்ற போது அவைகளில் மீட்படைய, உதவி செய்வதற்கு, வழிகளைக் காட்ட எமக்கு எவருமே இல்லை. **"அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும், நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்."** அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று **பரி.யோவன் 1:14**இல் எழுதப்பட்டுள்ளது. **எங்கள் பலவீனத்தின் போதும், சோதனையின் போதும் எனக்குத் துணையாக இருப்பது, உதவி செய்வது இயேசு கிறிஸ்துவல்லவா?** ஆகையால் தேவ வசனத்தை வாசிப்பது அவசியம் இல்லையென நீங்கள் நினைக்கலாம். ஆனாலும் வசனமே தேவன் ஆவார். தேவன் உங்களோடு எனின் மேலே கூறப்பட்ட வசனத்திற்கூடாக **உங்கள் உள்ளத்தில் பேசி உங்களால் செய்யப்பட்ட அனைத்து பாவங்களினின்றும் மீட்டுக் கொள்வார்.** ஆகையால் வசனத்தை **உங்கள் இருதயப் பொக்கிஷமாக காத்துக் கொள்ளுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தேவ வசனத்தை எந்நேரமும் வாசித்து செவிமடுத்து என் இருதயப்பலகையில் எழுதிக் கொள்வது அவசியம். வசனத்திற்கூடாக வழிக்காட்டி கிருபையாக என்னை முன்னோக்கிக் கொண்டு செல்லுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்." (நீதிமொழிகள் 4:22)

ஜீவ மன்னா

ஜூலை **09**
வியாழன்

## ஆத்மீக வாழ்வில் பின்னிட்டுப் பார்க்காது முன்னோக்கி ஓடுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 01 - 02

**"அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்."**
(ஆதியாகமம் 19:17)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் இப்புதிய நாள் உங்களனைவருக்கும் நன்மைகள் நிறைந்த நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** சிருஷ்டிப்பின் தேவனைக் குறித்து அறிந்துக் கொண்ட **நீங்களும், நானும் அதிரஷ்டக்காரர்கள்!** தேவன் நீதிமானை ஒரு போதும் கைவிட மாட்டார். அத்தோடு **அவர் நீதியின் தேவன் என்பதனால் எங்களையும் நீதிமானாக்க அதிகமாக பாடுபடுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! மேற் கூறப்பட்ட **ஆதியாகமம் 19:17**இல் எழுதியுள்ளதன்படி, அவர்களை வெளியே கொண்டு போய் விட்ட பின்பு **அவர் உன் ஜீவன் தப்ப ஓடிப் போ பின்னிட்டுப் பாராதே. இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப் போ என்றார்.** சொதோம் கொமோராவை அழிக்கின்ற வேளை தேவ தூதர்கள் லோத் அவருடைய மனைவி இரண்டு குமாரத்திகள் அனைவரையும் பட்டணத்தைவிட்டு அழைத்துக் கொண்டு வெளியேறும்படியாக லோத்தை துரிதப்படுத்தினார்கள். லோத் தாமதித்துக் கொண்டிருக்கும் போது தேவன் அவர் மீது வைத்த இரக்கத்தினாலே அந்தப் புருஷரின் மூலமாக **லோத்தின் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டார்கள்.** அதன் பிறகு மேலே கூறப்பட்ட தேவ வசனத்தை தேவன் இவ்வாறாகக் கூறினார். உன் ஜீவன் தப்ப ஓடிப் போ. பின்னிட்டுப் பாராதே என்றாகும்.

தேவ பிள்ளைகளே! லோத் சிறிய ஊருக்கு கடந்து செல்ல அனுமதி கேட்டார். ஏனென்றால் அவர் கூறியது மலைக்கு ஓடிப் போக என்னால் முடியாது. தீங்கு என்னைத் தொடரும் என்றாகவே. தேவன் லோத்தின் அந்த வேண்டுகோளை நிராகரிக்காமல் ஏற்றுக் கொண்டார். ஆனாலும் **நகரை நோக்கி பின்னிட்டுப் பார்த்தபடியால் லோத்தின் மனைவியோ உப்புத்தூண் ஆனாள்.** தேவ பிள்ளைகளே! **ஆத்மீக வாழ்வில் ஒரு போதும் பின்னிட்டுப் பார்க்காமல் முன்னோக்கியே பயணியுங்கள்.** சில வேளைகளில் அவ்வாறாக பார்க்கும் போது எங்கள் கால்கள் இடறி காரியங்கள் மீண்டுமாக எண்ணத் தோன்றும். ஜீவக் கிரீடத்தை உரிமையாக்கிக் கொள்ள போகும் பயணத்தில் நின்றுவிடாது **தேவனின் சத்தத்திற்கு செவி கொடுத்து முன்னோக்கி நீங்கள் ஓடுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! லோத்தின் மனைவியைப் போல உங்கள் குரலுக்கு கீழ்படியாது எனக்கு முன்பாக வைத்திருக்கும் ஓட்டத்தில் நின்று விடாது பின்னிட்டுப் பார்க்காது முன்னோக்கி ஓட தயை செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்." (வெளிப்படுத்தல் 3:12)

ஜீவ மன்னா

ஜூலை **10**
வெள்ளி

# உங்கள் உள்ளத்தின் உன்னத பெலனான தேவன்!

இன்றைய வேதவாசிப்பு


2 நாளாகமம்
அதி: 03 - 04

**"என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்; தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்."**
(சங்கீதம் 59:17)

அருமையான தேவ பிள்ளைகளே! அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் உங்கள் குடும்பத்தில் சந்தோஷம், சமாதானம், சுகம் மூன்றும் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதனானவனுக்கு அன்றன்று தங்கள் காரியங்களில் வெற்றிப் பெற்றுக் கொள்வதற்கு **அவர்களுக்கு சரீரத்தில் நல்ல பெலனும் சலனப்படாத ஆறுதலான, தைரியமான உள்ளமும் வேண்டும்.** அப்படியில்லாவிடின் அவன் ஒன்றும் செய்ய முடியாமல் தோல்வியடைகின்றான். ஆனாலும் **உள்ளம் கலங்காதிருங்கள்!** உங்களுக்கு பெலனான படைப்பின் தேவன் இன்றும் உங்களோடு இருப்பாராக!

தேவ பிள்ளைகளே! சரீரத்தின் பெலன் எவ்வளவாக அதிகமாக காணப்படினும் **உங்கள் காரியத்திலும் அவன் திறமையில்லாதவனென்பதை நாமறிவோம்.** துணிகரம் அவனது உள்ளத்தில் இருக்கின்றபடியால் **உள்ளத்தில் பெலன் பெற்றவர்கள் எல்லா வழிகளிலும் ஜெயத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.** மேலே கூறப்பட்ட **சங்கீதம் 59:17**இல் இவ்வாறாக எழுதப்பட்டுள்ளது. என் பெலனே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன். **தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும் கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார் என்றாகும்.** ஆகையால் மனிதனது உள்ளம் அவனது வாழ்வில் வெற்றி பெற வேராக இருப்பதனால் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மனிதனது உள்ளத்தை பெலப்படுத்த முடியுமென்பதை அதில் கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த ஆவியானவரது ஆவியில் நாங்கள் பெலனுள்ளவர்களாவதோடு **எங்கள் ஆத்துமாவும் வல்லமையடைகிறது. அப்பொழுது எங்கள் உள்ளமும் பெலன் பெறுகிறது.** ஆகையால் தினமும் ஜெபித்து தேவ ஆவியில் நிரம்பி வல்லமை பெற அவசியம். **பரி.யோவான் 16:33**இல் **"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள்."** நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். தேவன் இவ்வாறாகக் கூறியிருப்பதால் நாங்கள் உள்ளத்தை பெலப்படுத்தி **எங்கள் ஆவிக்குரிய பயணத்தில் முன்னோக்கி ஓடுவது அவசியம்.** இன்னுமாக எப்போதும் தேவ வசனத்தை வாசித்து அதை இருதயத்துக்குள் வைத்து எப்போதும் தியானம் செய்து அதன்படி ஜீவிக்க வேண்டும். எப்போதும் **தேவ வசனத்தை தியானிக்கும் போது எங்கள் மனம் அதிகமாக பெலன் பெறுகின்றது.** இன்று முதல் தேவனுக்குள் உங்கள் உள்ளத்தை பெலப்படுத்திக் கொள்ளுங்கள். **உங்களை பெலப்படுத்தி ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதத்தின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் பெலனான தேவன் என்பதால் ஸ்தோத்திரம்
எனது உள்ளம் பெலவீனப்பட்டு எனது வாழ்க்கை தோல்வியுறாது
போகாதபடி என் உள்ளம் பெலப்பட தேவ ஆவியில் நிரப்புங்கள்
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலேயும்; நல்ல மனுஷனோ தன்னிலே தானும் திருப்தியடைவான்."
(நீதிமொழிகள் 14:14)

ஜீவ மன்னா

ஜூலை **11**

சனி

# உங்கள் சுய புத்தியில் சாயாமல் கர்த்தர் பேரில் விசுவாசங் கொள்ளுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 05 – 06

**"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,"** (நீதிமொழிகள் 3:5)

அருமையான தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய நாளில் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் என்பதால் உள்ளத்தில் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனிதனும் அறிவுத்திறன், அறிவாற்றல் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுகிறது. ஆனாலும் தேவனின் பிள்ளைகளாக **தேவனால் அழைக்கப்பட்ட எம் ஒவ்வொருவருக்கும் பேதமின்றி, தகுதிபாராது, ஒரே மாதிரியாக அறிவுத்திறன், ஆற்றல்களைத் தந்திருக்கின்றார். யாக்கோபு 1:5**இல் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துக் கொள்ளாதவருமாகிய **தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என வசனத்தில் எழுதப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மனிதர்கள் தனது அறிவு, ஆற்றல் என்பவைகளில் மாத்திரம் **விசுவாசங் கொண்டு வாழ்கின்றார்கள்.** அவர்கள் அப்படியாக வாழ்வதற்கு முனைந்து வாழ்வில் தவறிப் போகும் சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கின்றன. ஆனாலும் இன்றைய நாளில் மேலே குறிப்பிட்ட **நீதிமொழிகள் 3:5**இல் எங்களுக்கு கூறுவதாவது **"உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு"** என்றாகும். ஆகையால் நாம் அதிர்ஷடக்காரர்களாவோம்! ஏனெனில் சிருஷ்டிப்பின் தேவப்பிதா அவரது ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை எமக்கு வெளிப்படுத்தி அவருக்கூடாக எங்களைத் தம்மிடம் அழைத்துக் கொண்ட அச்சமயத்திலே **நாம் தேவன் பேரில் முழு உள்ளத்தோடு விசுவாசங் கொண்டோம்.**

தேவ பிள்ளைகளே! நாம் அப்படியாக செய்தபடியால் எங்கள் வாழ்க்கையில் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டோம். **எங்கள் வாழ்வு சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்பட்டு எங்கள் வாழ்வில் இருந்த அனைத்து பாவங்கள், குறைகள், கைவிட முடியாமல் காணப்பட்ட பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டோம்.** அது மாத்திரமின்றி மரணப்பபள்ளதாக்கினின்று கூட தேவன் எம்மைக் காத்து முன்னோக்கிக் கொண்டு வந்தார். பூமிக்குரிய ஞானம் எமக்கு எவ்வளவாக இருந்தாலும் எமது ஆத்துமாவை பாதுகாத்துக் கொள்ளவும், ஆத்துமா ஜீவனைப் பெற்றிடவும், உன்னதத்திலிருந்து எங்களுக்கு கிடைக்கப் பெறும் **தேவனின் ஞானம் அவசியமாகின்றது.** ஆகையால் உங்கள் அறிவு, ஆற்றல் அல்ல தேவன் பேரில் விசுவாசங் கொள்ளுங்கள். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் பேரில் முழு உள்ளத்தோடு விசுவாசிப்போர் வாழ்வில் வெற்றி பெறுவார்கள். ஆகையால் எனது ஞானத்தைக் குறித்து எனது ஆற்றலைக் குறித்து விசுவாசிக்காமல் உங்கள் பேரில் மாத்திரம் விசுவாசம் வைத்து வாழ்வில் வெற்றி பெற தயை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." (ஏசாயா 26:3)

ஜீவ மன்னா

ஜூலை **12** ஞாயிறு

# பயத்தின் ஆவியை போக்கி உங்கள் ஆவியை பெலப்படுத்தும் இயேசுகிறிஸ்து!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 07 - 08

**“தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.”** (2 தீமோத்தி 1:7)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் அதிகாலையில் ஜெபித்து தேவ சத்தத்தைக் கேட்டீர்களா? **அந்த சத்தமானது இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வரையறுத்து உங்களை வெற்றியின் பாதையில் கொண்டுச் செல்ல வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனானவர் மிக வல்லமையான பராக்கிரம தேவன் தேவனை ஏற்றுக் கொள்பவர்க்கு தேவன் தேவ ஆவியை பெற்றுத் தந்து அவர்களை பெலப்படுத்துவதே **தேவனின் நோக்கமும் பிரியமுகமாவிருக்கிறது. ஆகையால் தேவனை அறிந்துக் கொண்ட நாம் அதிர்ஷ்டக்காரர்களாவோம்!**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **“பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.”** ஆகையால் **உங்கள் உள்ளங் கலங்காதிருப்பதாக!** மனிதனது ஆவியில் பலவிதமான பெலவீனங்கள் குறைபாடுகள் இருக்கலாம். ஆனாலும் உலகில் மற்ற மனிதர்களுக்குப் போல் அல்லாது ஜீவிக்கன்ற தேவப் பிதாவானவரது சொந்த பிள்ளைகளாகிய எங்களுக்கு எல்லா பெலவீனங்களின் போதும் அவைகளிலிருந்து மீள எமக்கு முடியும். ஏனெனில் தேவனுக்கூடாக **பரிசுத்த ஆவியானவர்** எமக்குள் வாசம்பண்ணி எங்கள் ஆத்துமாவில் காணப்படுகின்ற **அனைத்து பெலவீனங்களிலும், குறைப்பாடுகளிலிருந்தும் மீட்டுக் கொள்ளுவார்.**

தேவ பிள்ளைகளே! விஷேசமாக இன்றைய நாளில் **2 தீமோத்தேயு 1:7**இல் தேவன் எமக்குக் கூறுவது எங்களுக்குள் காணப்படுகின்ற **“பயத்தின் ஆவியை நிர்மூலப்படுத்தி வல்லமையான ஆவியில் நிரப்புவார் என்பதையாகும்.”** இது தேவன் கூறியதல்ல பவுலடியார் கூறியது என எண்ணாதீர்கள். இன்னுமாக பவுலடியார் கூறுவது **1 கொரிந்தியர் 1:5**இல் **“என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது”** என்றாகும். ஆகையால் பவுலடியாரின் இந்த வெளிப்படுத்துதலை நீங்களும் விசுவாசித்து உங்கள் **ஜெப வேளைகளை இடைவிடாது இயேசுவின் பாதத்தில் ஜெபித்து தேவ ஆவியினால் நிரபப்பப்படுங்கள்.** அப்பொழுது பயத்தின் ஆவி உங்களிலிருந்து நிர்மூலமாகும். **நீங்கள் வல்லமைப்படுவீர்கள்.** அப்படியாகும் போது உங்கள் ஆத்மீக வாழ்வில் ஜெயம் பெற மிகவும் இலகுவாயிருக்கும். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் ஆத்துமாவை வல்லமைப்படுத்தும் தேவன் ஆகையால் என் பயத்தின் ஆவியை நீங்கள் நிர்மூலப்படுத்தி என் ஆத்துமாவை உங்கள் தேவ ஆவியில் நிறைந்திடுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும்,...” (அப்போஸ்தலர் 1:8)

ஜீவ மன்னா

ஜூலை **13**
திங்கள்

**முழு உள்ளத்தோடு அன்பு கூறுபவர்கள் பரலோக கிருபையைப் பெறுவார்கள்!**

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம்
அதி: 09 – 10

**"...தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்."**
(2 நாளாகமம் 6:14)

என் அன்பான தேவ ஜனங்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் உங்களுக்கு வெற்றிகரமான நாளாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆகாயத்தையும், பூமியையம் இங்கு காணப்படுகின்ற யாவையும் படைத்து ஆளுகை செய்கின்ற சர்வ வல்லமையுள்ள பரலோக **தேவப் பிதாவின் மேன்மைமிக்க இரக்கம் இன்றும் உங்களை நோக்கிய வண்ணமாயிருக்கிறது.** தேவனின் அளவற்ற கருணையைப் பெறுகின்ற உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமுள்ளதாகும். ஏனெனில் **தேவனது கருணை நாளுக்கு நாள் புதிதாகும்.**

தேவ பிள்ளைகளே! **புலம்பல் 3:22** தேவ வசனத்தில் கூறுவது நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே! **அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.** அவைகள் காலை தோறும் புதியவைகள் உமது உண்மை பெரிதாயிருக்கிறது என்றாகும். ஆகையால் **உள்ளங் கலங்காதிருங்கள்!** நோவாவின் காலத்தில் பெரு வெள்ளத்தினால் முழு உலகமும் அழிந்தது. ஆனாலும் நோவா நீதிமானாக ஜீவித்தபடியால் நோவாவும், அவரது மனைவியும் அவருடைய மகன்மார் மூன்று பேரும், அவர்களுடைய மனைவிமாரும் மாத்திரம் **இப்பூமியில் எல்லா மனிதர்களின் மத்தியில் காக்கப்பட்டு உயிரோடிருந்தார்கள்.** தேவன் நோவாவோடும் அவரது புத்திரர்களோடும் "இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும் பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும் உங்களோடு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். **அந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில்லை மேகத்தில் வைத்தார்.**

தேவ பிள்ளைகளே! நோவாவோடும் அவரது புத்திரர்களோடும் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது. **அது ஏழு வர்ணங்களில் வானத்தில் தோன்றுவதைக் காணலாம்.** மழை பெய்கின்ற காலத்தில் வானவில் வானத்தில் தோன்றுகையில் மனிதன் **இனி மழை பெய்யப் போவதில்லை வானத்தில் வானவில் தோன்றியுள்ளது என்று கூறுகின்றான்.** நோவாவோடு தேவன் செய்த உடன்படிக்கை அப்படியே நிகழ்வதெனின் மேலே கூறப்பட்ட **2 நாளாகமம் 6:14**இல் எழுதியுள்ளதன்படி **"தேவன் முன்னிலையில் முழு உள்ளத்தோடு தேவனோடு உறவாடும் எங்களோடும் தேவனின் உடன்படிக்கையும், இரக்கமும் அவ்வாறாகவே இருக்கும்."** தேவன் என்றும் மாறாதவர். கிருபையும், இரக்கமும் நிறைந்த **வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் முன்னிலையில் முழு உள்ளத்தோடு உறவாடுபவர்க்கு உங்கள் கருணையும், உங்கள் உடன்படிக்கையும் மாறாது. உங்கள் முன்னிலையில் முழு உள்ளத்தோடு நேசிக்கின்ற உங்கள் இரக்கத்திற்கும் உடன்படிக்கைக்கும் பங்காளராக கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." (எரேமியா 29:13)

ஜீவ மன்னா

ஜூலை 14 செவ்வாய்

# தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவியே!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 11 – 12

**"உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துகொள்ளேன்; உன் தகனபலிகள் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது."** (சங்கீதம் 50:8)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனான நமத இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்திலே உதயமாகிய **இன்றைய நாளில் நிலைவரமான ஆவியிலே தேவன் உங்கள் உள்ளத்தை புதுப்பித்தருளுமாறு வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் தேவ வசனத்திற்கூடாக உங்களைச் சந்திக்கக் கிடைத்த கிருபைக்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். மேலே கூறப்பட்ட **சங்கீதம் 50:8**இல் எழுதி இருப்பது **"உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துக் கொள்ளேன். உன் தகனப்பலிகள் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது."**

தேவ பிள்ளைகளே! பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தமது பலிப் பூஜைகளை தேவனின் சமூகத்தில் ஆசாரியர்களைக் கொண்டு **ஒப்புக் கொடுப்பார்கள்.** ஏனென்றால் அவர்களது எல்லா கீழ்படியாத செயல்களின் நிமித்தம் தேவனின் சந்நிதியில் பலிபூஜைகளை ஒப்புக் கொடுத்து (ஒரு மிருகம் அல்லது பறவை) **அவர்களது பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டுள்ளது.** ஆனாலும் புதிய ஏற்பாட்டின்படி புதிய உடன்படிக்கை காலத்தில் வாழும் எமக்கு அவ்வாறான கட்டளைகள் இல்லை. ஆனாலும் புதிய ஏற்பாட்டின்படி தகனப்பலிகள் அல்ல **எங்கள் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலிகளை ஏறெடுக்க வேண்டும்.** ஆவியினால் நிறைந்து சங்கீதங்களினாலும், ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் **"எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" என எபேசியர் 5:18,19,20**வது வசனங்களில் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! தகனபலிகளாக பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் முன்னிலையில் வாசனைத் திரவியங்களால் பூஜை செய்தார்கள். ஆனாலும் எங்களுக்கு தகனப்பலி பூஜைகள் ஒப்புக் கொடுக்கப்பட கட்டளைகளாக நியமிக்கப்படவில்லை. **பரலோகப் பிதாவின் ஒரே பேறான இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நாங்கள் பழைய மனிதனின் செய்கைகள் அனைத்தையும் அகற்றி நிர்மூலமாக்கி புதிய மனிதனாகப் பிறந்துள்ளோம்.** ஆகையால் நீதிமான்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இயேசுகிறிஸ்துவுக்குள் வாழ அவரின் பரிசுத்த ஆவியின் அக்கினியில் **எமது மாம்ச இச்சைகள் எரிந்து நிர்மூலப்படுவது அவசியமாயிருக்கின்றது. அதுவே தேவன் முன்னிலையில் தகனப்பலியாகும். வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! புதிய உடன்படிக்கையொன்றை என்னோடு செய்து உங்கள் இரக்கத்தை எனக்குக் காட்டுவதனால் ஸ்தோத்திரம்! எனது உதடுகளின் கனியாக ஸ்தோத்திரப் பலியை செலுத்த எனது மாம்ச இச்சைகளை தகனப்பலியாக செலுத்த எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங்கீதம் 51:17)

ஜீவ மன்னா

ஜூலை 15 புதன்

# நீங்கள் மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 13 - 14

**"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்;"** (பரி.லூக்கா 6:37)

தேவனுக்குள் பிரியமான தேவ ஜனங்களே! இவ் வானத்திலும், பூமியிலும் அதிலுள்ள யாவும் உயர்த்தும் **ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தைக் கொண்டு இப் புதிய நாளில் ஆசீர்வாதமாக வாழ வாழ்த்துகின்றேன்.** நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கூடாக எமது சகல பாவங்களுக்கும் மன்னிப்பை பெற்றுக் கொண்ட நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்! ஏனெனில் நாம் கீழ்படியாமையினாலும், அநீதியான செய்கைகளின் நிமித்தமாகவும் **எம் சிருஷ்டிப்பின் கர்த்தரை விட்டு விலகி மிக தூரமாகிப் போனோம்.** ஆயினும் இயேசுகிறிஸ்து எம் மத்தியில் மத்தியஸ்தராக இருந்து எமக்கும், படைப்பின் தேவனுக்கும் இடையில் ஏற்பட்ட **இடைவெளியை உடைத்தெறிந்தார்.**

தேவ பிள்ளைகளே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் நாம் பாக்கியவான்களாவோம். இச் செய்தியின் பிரதான வேத வசனம் **பரி.லூக்கா 6:37**இல் இயேசுகிறிஸ்து தன் சீஷர்களுக்கு கூறிய வார்த்தைகளாகும். **"மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்"** என்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** அப்படிச் செய்வதன் மூலம் எம் வாழ்விற்கு பெரிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில் தேவனுடைய வார்த்தையின்படி நாம் அடுத்தவர்கள் மீது குற்றம் சுமத்தாமலும்; குற்றவாளிகள் என்று தீர்ப்பிடாமலும் இருக்கும் போது **தேவனுக்கு முன்பதாக ஆக்கினைக்குள்ளாகமலும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாமலும் இருப்போம்.**

அருமையானவர்களே! மனிதர்கள் மற்றவர்களின் பிழைகளை தேடி அவர்களை குற்றவாளிகள் என தீர்ப்பிடவும் **ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட வர்களாயிருக்கி-றார்கள். இப்படிப்பட்ட செய்கைகளை உலகரீதியில் வாழும் மனிதர்கள் செய்யலாம்.** ஆனால் ஆண்டவரின் பிள்ளைகளாகிய ஆத்மீகர்கள் அவ்விதமான கிரியைகளைச் செய்யக்கூடாது. மனிதர்களின் பாராட்டுதலை பெறவோ, மற்றவர்களின் இருதயத்தில் இடம்பிடிக்கும்படியாகவோ இக் காரியங்களை செய்ய முடியாது. ஏனெனில் எம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதபடி ஆக்கினைக்குத் தீர்க்கப்படாதிருக்கும்படி எம்மை சகல பாவங்களிமிருந்து எம்மை இரட்சித்துக் காத்துக் கொண்ட இயேசுகிறிஸ்து எங்களை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கிறார். **அவரது பிரமாணங்களை நாம் கைக்கொண்டு நடக்கிறோமா? என்று எம்மை ஆராய்ந்தறிகிறவராய் இருக்கிறார்.** உங்கள் ஆத்மீக சகோதர சகோதரிகளுடைய வாழ்வினில் காணப்படும் குறைகளை, பிழைகளை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். ஆயினும் அவர்களை நீங்கள் குறைவாய் மதிப்பிடாமலும், பேசாமலும் அவர்களுக்காக ஜெபியுங்கள். அதன் மூலம் **ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என்னை நேசிக்கும் அருமை இரட்சகரே! நீங்கள் இப்புவிக்கு வருகை தந்தது என்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவோ குற்றவாளி என தீர்மானிக்கவோ அல்ல என்பதையும் என்னை இரட்சிக்கவே வந்தீர்கள் என்பதையும் அறிவேன். ஆகையால் உங்கள் கட்டளைகளின்படி வாழ எனக்கு அருள்புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்." (பரி.லூக்கா 6:40)

ஜீவ மன்னா

ஜூலை **16**
வியாழன்

# தேவ வார்த்தையை அற்பமாய் எண்ணாதீர்கள்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 15 – 16

**"அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைபெறுவது மெய்யோ என்று சொல்வானேன்?"**
(ஆதியாகமம் 18:13)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! அனுதினமும் எம்மை அதிசயம் காணச் செய்யும் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைக்கு உங்கள் வாழ்வில் மிகப் பெரிய அற்புதங்கள் நிகழ வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.** ஆபிரகாமை ஆசீர்வதித்து அற்புதம் காணச் செய்த தேவன் இன்றும் எங்களோடிருக்கிறார். அவரது பிள்ளைகளாகிய **நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நாம் கேட்பதற்கு மேலாய் நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும் அதிகமாய் எமக்கு தந்தருளி எம்மை ஆசீர்வதிப்பார்.**

தேவ பிள்ளைகளே! அனேக சந்தர்ப்பங்களில் நினைத்துப் பார்க்க கூட முடியாத விசுவாசிக்க முடியாத **பிரமிக்கத் தக்க காரியங்களை கர்த்தர் எம் வாழ்வில் செயல்படுத்துகிறார்.** அப்படியான காரியங்களை நிறைவேற்றுவதற்கு முன்னர் அதை சம்பந்தப்பட்டவர்களிடம் வெளிப்படுத்தி விட்டே செய்வார். மேலே தரப்பட்ட வேதவாக்கியம் ஒரு காரியத்தை குறித்ததாகும். சாராள் என்பவள் ஆபிரகாமின் மனைவியாவாள் இவர்கள் இருவரும் வயோதிபர்களாயிருந்தார்கள் என்று **ஆதியாகமம் 18:11**இல் கூறுகிறது. ஆபிரகாமும் சாராளும் வயது சென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போயிற்று என்பதாக. எழுதப்பட்டுள்ளது. இக்காரியம் இப்படியிருக்கையில் தேவனானவர் ஆபிரகாமை சந்தித்து கூறுகிறார் **"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன் அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்"** என்றார்.

தேவ பிள்ளைகளே! கர்த்தர் உரைப்பதை அவருக்கு பின் புறமாய் கூடார வாசலில் சாராள் இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். **சாராள் தன் உள்ளத்திலே நகைத்து இது எப்படி நடக்கும்? என எண்ணினாள்.** அப்போது ஆண்டவர் "ஆபிரகாமிடம் சாராள் நகைத்தது நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்" என்றார். ஆயினும் தேவ பிள்ளைகளே! சாராள் **தேவனின் வார்த்தையின்படி வயோதிபத்திலும் ஈசாக்கை பெற்றெடுத்தாள்.** அவனுக்கூடாக இஸ்ரவேல் வம்சமே பூமியில் பெருகியது. ஆகையால் நீங்களும் தேவன் உங்களிடம் சொல்லும் வார்த்தைகளை அற்பமாய் நினையாதிருங்கள். அது நடக்காது என எண்ணாதீர்கள். கர்த்தரின் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளும் நிறைவேறுவதால் உங்கள் கரங்களில் இருக்கும் வேதாகமத்தில் **உங்களுக்கு உரைக்கப்பட்ட எல்லா வார்த்தைகளையும் பயத்துடனும், கௌரவத்துடனும் மதித்து ஏற்று நடவுங்கள். இன்று மனமகிழ்ச்சியின் நாள்!**

**ஜெபம்**

பரிசுத்த ஆவியானவரே! உங்கள் வாயின் வார்த்தைகள் யாவும் நிறைவேறுகிற ஜீவனுள்ள வார்த்தைகள் என் நான் விசுவாசிக்கிறேன். உங்கள் வாய் மொழிகள் யாவற்றையும் பயத்துடனும், கௌரவத்துடனும் ஏற்று அதன்படி நடக்க எனக்கு ஒத்தாசை புரிந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்."
(நீதிமொழிகள் 13:13)

ஜீவ மன்னா

ஜூலை **17** வெள்ளி

# நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களை ஆறுதல்படுத்தும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 17 - 18

**“நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.”** (சங்கீதம் 34:18)

அருமையான தேவ பிள்ளைகளே! நித்தியமானவரும் பரிசுத்தமானவருமான ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவினால் மீட்பை பெற்றுக் கொண்ட உங்கள் அனைவரையும்**! **இக்காலைப் பொழுதினில் சகல நன்மைகளும் பெற்று நலத்தோடு வாழ வாழ்த்துகின்றேன்.** இன்றைய தினத்திலும் தின மஞ்சரி ஜீவ மன்னாவுக்கூடாக வழங்கப்படும் தேவனுடைய நற்செய்தி உங்கள் இருதயங்களை பெலப்படுத்தி தைரியப்படுத்துமென விசுவாசிக்கிறேன். **சங்கீதம் 34:18**இல் “**நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்**” என்ற தேவ வசனமே பிரதான வசனமாயிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! நேற்றைய நாளில் உங்கள் வாழ்க்கையில் முகம் கொடுக்க நேர்ந்த சம்பவங்களின் நிமித்தம் **நீங்கள் துக்கத்தோடும், வேதனையோடும் உடைந்த உள்ளத்தோடும் காணப்படுகிறீர்களா?** உங்கள் இருதயம் எதனால் நொறுங்குண்டது? என்று சற்று ஆராய்ந்து பாருங்கள். உங்கள் ஆவிக்குரிய பயணத்தில் தடைகளை உண்டுபண்ணி உங்கள் ஆத்மீக வாழ்க்கையில் பின் மாற்றத்தை ஏற்படுத்தி **தேவ அன்பிலிருந்து உங்களை தூரமாக்கும்படியாக சாத்தான் மேற்கொண்ட சூழ்ச்சிகள் நிமித்தம் ஏற்பட்ட காரியங்களினால் உங்கள் இருதயம் நொறுங்குண்டு உள்ளம் உடைந்து போனதா?** அல்லது ஆண்டவரின் குரலுக்கு கீழ்படியாது அவர் விரும்பாத அல்லது அவர் உங்களைக் குறித்து வைத்திருந்த சித்தத்திற்கு விரோதமாக நீங்கள் செயல்பட்டபடியால் இப்படியாக மனம் நொறுங்குண்டு காணப்படுகிறதா? என்பதை உங்களால் புரிந்துக் கொள்ள முடியும்.

அன்பு பிள்ளைகளே! உங்கள் தவறுகள், பெலவீனங்கள் மூலம் உங்களுக்கு இப்படியாக உங்கள் உள்ளம் நொறுங்குண்டு போயிருந்தால் இன்றே நீங்கள் தேவனுடைய பாதத்தில் உங்கள் பாவங்களை, தவறுகளை அறிக்கையிட்டு மனங்கசிந்து மன்னிக்கும்படி ஜெபிப்பீர்களென்றால் தேவன் தாமே உங்களை மனமிரங்கி மன்னித்து மறுபடியும் மகா தயவுள்ள தேவன் உங்களை அண்மித்து அரவணைத்துக் கொள்வார். **சாத்தான் கொண்டு வந்த சூழ்ச்சிகளை ஏற்பட்ட போராட்டங்களினால் ஆத்மீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகளால் உள்ளம் நொறுங்குண்டு காணப்படுமாயின் தேவனிடம் ஜெபியுங்கள்.** ஒரு மனிதன் மற்றவனுடைய உள்ளத்தை அறியாதபடி அவனை ஒதுக்கி வெறுத்து தள்ளிய போதும், குறைவாக மதிப்பிட்ட போதும், இன்றும் ஆழ்ந்த துக்கத்தில் தத்தளிக்கும் போதும் மனிதனுடைய உள்ளத்தின் உணர்வுகளை அறிகிற தேவன் **நொறுங்குண்ட இருதயங்களை அற்பமாய் எண்ணாது அவர்களுக்கு மிக அருகில் இருக்கிறவராய் இருக்கிறார். உங்களையும் அவ்வாறே அரவணைத்து ஆறுதலிக்கும் ஆறுதலின் நாள்**

**ஜெபம்**

என் அன்பின் தேவனே! என் நொறுங்குண்ட இருதயத்திற்கு ஆறுதலளிக்க யாருமில்லாத நிலையில் வேதனைப்பட்டேன். ஆயினும் இன்று முதல் அப்படியிராமல் நொறுங்குண்ட இருதயங்களை ஆறுதல்படுத்தும் தேவனிடத்தில் என் இருதயத்தை ஆறுதல்படுத்துமாறு ஜெபிக்கிறேன். என்னை ஆறுதல்படுத்தி ஆசீர்வதிக்குமாறு ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“...உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.” (ஏசாயா 57:15)

ஜீவ மன்னா

ஜூலை 18 சனி

# சாத்தானின் சகல வல்லமைகளையும் நிர்மூலப்படுத்தும் இயேசுகிறிஸ்து!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 19 - 20

**"அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாத படிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்."**

(பரி.மாற்கு 5:6,7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! நாம் தேவனோடு செலவிடும் ஒவ்வொரு வினாடியும் வீணாகிப் போகாதவாறு எம்மை பெலத்தால் நிரப்பும் எம் **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை இன்றைய நாளில் ஆவியினால் நிரப்பி ஆசீர்வதிக்குமாறு வாழ்த்துகின்றேன்.** இன்று உங்களுக்கு ஜெயமே! தேவ பிள்ளைகளே! சாத்தானின் அந்தகார வல்லமைக்கு அடிமைப்பட்டிருந்த எம்மை இயேசுகிறிஸ்துவின் மூலமாக அவரது பரிசுத்த இரத்தத்தின் வல்லமையால் இரட்சித்து அவரது சொந்தப் பிள்ளைகளாக்கினார். இன்றும் அவருக்கூடாக **சாத்தானின் அந்தகார வல்லமையிலிருந்து விடுதலைப் பெறக் கூடியதாக இருக்கிறது. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! எம் தேவ செய்தியின் முதல் வசனம் லேகியோன் என்னும் அசுத்த ஆவியினால் கட்டப்பட்டிருந்த ஒரு மனிதனை இயேசுகிறிஸ்து விடுதலையாக்கிய சந்தர்ப்பத்தையாகும். அசுத்த ஆவிகளால் பிடிக்கப்பட்டிருந்த **இம் மனிதன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். "அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அனேகந்தரம் விலங்குகளினாலும், சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும் சங்கிலிகளை முறித்து விலங்குகளை தகர்த்து போடுவான் அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும், பகலும் மலைகளிலும், கல்லறைகளிலும் இருந்து கூக்குரலிட்டு கல்லுகளினால் தன்னை காயப்படுத்திக் கொண்டிருந்தான்"** என்று **பரி.மாற்கு 5:3,4,5**இல் எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகளே! இது இப்படியான போதும் எமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து கெனசரேத் என்னும் கிராமத்தில் படகிலிருந்து இறங்கியவுடனே அசுத்த ஆவியுள்ள **லேகியோன் என்ற மனிதன் அவருக்கு முன்பாக ஓடி வந்து அவரை நோக்கி "உன்னதமான தேவனுடைய குமாரனாகிய இயேசுவே எனக்கும், உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான்."** ஏனெனில் அவர் அவனை நோக்கி அசுத்த ஆவியே மனுஷனை விட்டுப் புறப்பட்டு போ என்று சொல்லியிருந்தார். இயேசுகிறிஸ்து தேவனின் குமாரனென்றும் அவருக்குள் காணப்படும் வல்லமை எத்தகையது என்பதையும் சாத்தான் நன்கு அறிவான். **இன்றும் சாத்தானை தோல்வியடைச் செய்யும் வல்லமை இயேசுகிறிஸ்வுக்கூடாக வெளிப்படுகிறது. நீங்கள் பயப்படாதீர்கள்! உங்களை அந்தகார வல்லமைகளிலிருந்து விடுவிக்கும் தேவன் உங்களோடிருக்கிறார். விடுதலையின் நாள்!**

ஜெபம்

என் அருமை இயேசுவே! லேகியோனுக்குள் கிரியை செய்யும் அநேக அசுத்த ஆவிகள் உமக்கு முன்பதாக பயந்து நடுக்கத்துடன் வெளியேறியது போல, இன்றும் அநேக பிசாசுகளின் அந்தகார ஆவிகள் ஆத்துமாக்களின்று வெளியேறி விடுதலைப் பெற வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"...பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (1 யோவான் 3:8)

**ஜீவ மன்னா**

**ஜூலை 19**
ஞாயிறு

# இயேசு உங்களைக் குறித்து அறிந்திருக்கிறார்!

**இன்றைய வேதவாசிப்பு**
2 நாளாகமம்
அதி: 21 – 22

**"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது."**
(பரி.யோவான் 10:27)

தேவனுக்குள் பிரியமான என் தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய தினத்திலும் அநேக விதமான சோதனைகளையும், பிரச்சினைகளையும், சஞ்சலங்களையும் சந்திக்கும் யாவரும் அதிலிருந்து அற்புத விடுதலையையும் வெற்றியையும் பெறும்படியாக வாழ்த்துகின்றேன். இயேசுகிறிஸ்துவை அறிந்து அவர் வழியில் நடப்பவர்கள் அனைவரும் அதிர்ஷ்டசாலிகளே**! ஏனெனில் அவரைக் காணாமலே அவரது கிரியைகளைக் கண்டு அவரை விசுவாசிக்கிறவர்களும், அவர் ஜீவனுள்ளவர் என நம்புகிறவர்களும் **பாக்கியவான்களே**!

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட தேவ வசனத்தில் **பரி.யோவான் 10:27**இல் "**என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்கு பின் செல்லுகிறது**" என்பதாகும். **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக**! எம்மை மாத்திரமல்ல எம் தலைமுறைகளைக் குறித்தும் சகல விதமான காரியங்களையும் அவர் அறிவார். விஷேசமாக நான் அவைகளை அறிந்திருக்கிறேன். என இயேசு கூறிய வார்த்தைகளின்படி அவர் எம்மையும் எம் உள்ளாந்தரங்களையும், வெளியரங்கமான வாழ்வினையையும் அறிகிறார் என அர்த்தங் கொள்ளலாம். ஆகையால் நான் பலவீனன் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என எண்ணாதிருங்கள். **தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே உங்களை தமக்கென்று வேறுப்படுத்திக் கொண்டார்.** உங்களை தெரிந்துக் கொண்டது மட்டுமல்ல இயேசுகிறிஸ்துவுக்கூடாய் தம்மிடம் உங்களை அழைத்துக் கொண்டார். அவர் உங்கள் தகப்பன், தாயை பார்க்கிலும் உங்களைக் குறித்து அறிந்திருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! பிதாவானவர் என்னைக் குறித்து அறிந்தவராய் இருக்கிறார். ஆனால் இயேசுகிறிஸ்து என்னை எப்படி அறிவார். என்று உங்களுக்கு எண்ணத் தோன்றலாம். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார் "**நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல** ........" என்பதாக **பரி.யோவான் 17:21**இல் கூறியிருக்கிறார். ஆகையால் பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதை அறியலாம். அதன்படி இயேசுகிறஸ்து யாவற்றையும் அறிந்தவராய் **உங்கள் சுபாவத்தையும் உங்கள் திராணியையும், சக்தியையும் அவர் அறிவார்.** ஆகையால் உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடார். உங்களால் தாங்க முடியாத துன்பம், பிரச்சினைகள், உபத்திரவங்கள் ஏற்பட்டு நீங்கள் ஆத்துமாவில் பின்மாற்றமடைய இடமளிக்கமாட்டார். **தேவன் உடனடியாக உங்களை விடுவித்து ஆறுதல் அளித்து காத்திடுவார்.** ஆகையால் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட **நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இன்று அனுக்கிரகத்தின் ஆசீர்வாதமான நாள்**!

**ஜெபம்**

என் பரலோக தேவனே! உங்கள் ஒரே புத்திரனான இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் என்னையும் உங்களிடமாய் அழைத்தபடியால் அவர் என்னைக் குறித்து சகலவற்றையும் அறிந்தவராயிருக்கிறார். ஆகையால் நன்றி செலுத்துகிறேன். இன்றும் மேலும் உங்கள் ஆசீர்வாதத்தை பொழிந்தருளுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்;..."
(பரி.யோவான் 10:14,15)

ஜீவ மன்னா

ஜுலை 20
திங்கள்

# உங்கள் விண்ணப்பங்களுக்கு செவி கொடுத்து மறு உத்தரவு அருளும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
2 நாளாகமம் அதி: 23 - 24

**"அப்பொழுது அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்; பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான்."** (ஆதியாகமம் 18:32)

அருமையான தேவ பிள்ளைகளே! ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று தெய்வீக அன்பினால் பூரணமானவர்களாய் எம்மை ஆசீர்வதித்து வழி நடத்தும் ஜீவனுள்ள இயேசுகிறிஸ்து ***இன்றும் உங்களுக்கோர் நல்ல நாளாக அமையச்செய்து வழிநடத்துமாறு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.*** உங்களைத் தேவன் நித்தமும் ஆசீர்வதித்து வழி நடத்துகிறபடியால் ***நீங்கள் அதிஷ்டசாலிகள்*** என்பதை இன்றும் உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன். ஏனெனில் உலகில் வாழும் மனிதர்கள் மத்தியிலும், சகல ஜாதிகள் மத்தியிலும் தேவனைக் குறித்து சில காரியங்களை அறிந்தவராய் இருப்பது முதலாவது காரியம், அவர் ஜீவனுள்ளவராய் வாசம் பண்ணுகிறார் என்று விசுவாசிப்பது இரண்டாவது காரியமாகும். ***அவ் விசுவாசத்தோடு ஜெபம் செய்து பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவ பிதாவிடம் உதவி ஒத்தாசைகளை பெறுவது மிக அரிதான காரியமல்லவா?***

அருமையானவர்களே! மூன்றாவதாக உங்கள் மண்ணுலக வாழ்வினை மாத்திரம் எண்ணாது உங்கள் ஆத்துமாவின் நித்திய ஜீவனுக்குரிய வரப்பிரசாதத்தை பெற்றிருப்பவர்களானபடியால் ***நீங்கள் அதிஷ்டசாலியாய் இருக்கிறீர்கள்.*** இன்றைய செய்தியின் பிரதான வசனம் வெளிப்படுத்துவதாவது சோதோம் கொமாரா தேசங்களை அழிக்காது காக்கும்படியாக ***ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக் கொண்ட விண்ணப்பமே***! இதன்படி ஆறுமுறை ஆபிரகாம் தேவனிடம் கேட்டுக் கொண்டான். "***முதல் முறை ஐம்பது நீதிமான்கள் நிமித்தம் அழிப்பீரோ என்று கேட்டான், ஐம்பது நீதிமான்கள் இல்லாததால் கடைசி முறையில் பத்து நீதிமான்கள் நிமித்தம் அழிப்பீரோ என்று கேட்டான்.***"

தேவ பிள்ளைகளே! ஆபிரகாம் ஒரு காரியத்தைக் குறித்து அநேகதரம் மகோத்துவமான தேவனுக்கு முன்பாக விண்ணப்பித்த போதும் அவர் கோபப்படாமலும், எரிச்சலடையாலும் பதிலளித்ததை நீங்கள் வாசித்துப் பாருங்கள். சற்று சிந்தியுங்கள் ஆபிரகாம் ஓர் மனிதனிடம் இவ்விதமாக அநேக தடவை கேட்டிருந்தால் என்ன ஒரே காரியத்தை குறித்து இத்தனை தடவை கேட்கீறீர்கள் ஒரு தடவை, அல்லது இரண்டு தடவை கூறினாள் நீங்கள் புரிந்துக் கொள்ள மாட்டீர்களா? என்று கோபமாக சொல்லியிருக்கக் கூடும். ஆனால் கர்த்தராகிய தேவனோ மிக சாந்தமுள்ளவராகவும், ***கிருபையுள்ளவராகவும் கோபம் கொள்ள தாமதிப்பவராகவே காணப்பட்டார்.*** ஆபிரகாமைப் போல் நீங்களும் உங்கள் சொந்த தேவைகளுக்காக ஜெபிக்காமல் மற்றவர்களுக்காக ஜெபியுங்கள். மற்றவர்களின் தேவைகள் இரட்சிப்பு, தேசத்தின் விடுதலை, தீராத வியாதிகளுக்கு சுகம் போன்ற ***அநேக காரியங்களுக்காக மத்தியஸ்தம் பண்ணி ஜெபம் செய்யுங்கள்.*** ஆபிரகாமை ஆசீர்வதித்த தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். ***இன்றைய நாள் உங்களுக்கு ஆசீர்வாதத்தின் மன மகிழ்ச்சியின் நாள்!***

ஜெபம்

என் அன்பின் தேவனே! ஆபிரகாமின் விண்ணப்பத்திற்கு கோபப்படாமல் பதிலளித்தவரே உமக்கு நன்றி! அதே போல் நானும் மற்றவர்களுக்காக தேசத்திற்காக உம்மிடத்தில் விண்ணப்பிக்கும் எனக்கும் மறுஉத்தரவு கொடுத்து தேசத்தையும், மற்றவர்களையும், அழிவினின்று காத்துக் கொள்ளும்படியாய் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்." (எரேமியா 29:12)

ஜீவ மன்னா

ஜூலை 21 செவ்வாய்

# நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 25 – 26

**"நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்; அக்காலமுதற்கொண்டு நான் அதை உனக்கு விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ? இதற்கு நீங்களே என் சாட்சிகள்;... "**
(ஏசாயா 44:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பரலோகத்திலும் பூலோகத்திலும் கிரியை செய்கிறவருமான இருந்தவரும், இருக்கிறவரும், இருப்பவரும் வரப் போகிறவருமான ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **உங்கள் எதிர்காலத்தின் வாழ்க்கையை குறித்து கலக்கமில்லாத, பயமில்லாத ஒரு நல்ல எதிர்காலம் அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எம் உள்ளம் கலங்கி திகைக்கும் தருவாயில் நிச்சயமாக எம் இருதயத்திற்கு சமாதானம் உண்டாகாது என்பதை நாமறிவோம். ஆகவே நாம் கேள்விப்படும் கலக்கமான பிரச்சினைகள், அல்லது சோதனைகள் எங்களை சூழ்ந்துக் கொள்ளும் போது ஒரு **மனிதனின் உள்ளத்துக்குள் குழப்பத்தை, கலக்கத்தை மனிதனுக்குள் உருவாக்கிவிடும் என்பது உறுதி.**

தேவ பிள்ளைகளே! இது சமந்தமாக தேவ வசனத்திற் கூடாக **எபேசியர் 6:16**இல் இப்படி கூறப்படுகிறது.**"பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்."** ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதருப்பதாக! **எம் எதிரியான சத்துருவானவன் அவனது அக்கினி அஸ்திரங்களை எம் மீது பிரயோகித்து அநேக மனக்குழப்பங்களை கொடுத்து மனவேதனையை உண்டு பண்ணுகிறான்.** இப்படி செய்வதால் எம் ஆண்டவருடைய இருதயத்தில் வேதனை உண்டாக்கலாம் என முயற்சிக்கிறவனாய் இருக்கிறான். ஆயினும் எங்களோடு வாசம் பண்ணும் ஆண்டவராகிய எமது ஆத்தும நேசர் எம்மோடிருந்து யாவற்றிலிமிருந்து எம்மை இரட்சித்துக் கொள்கிறார். **ஏசாயா 44:8**இல் நீங்கள் கலங்காமலும், பயப்படாமலும் இருங்கள். அக்காலம் முதற் கொண்டு நான் அதை உனக்கு விளங்கப் பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ இதற்கு நீங்கள் என் சாட்சிகள் என்பதாக கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இன்னுமாய் இயேசுகிறிஸ்து எமக்கு உரைக்கிறார். பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து என் நாமத்தினிமித்தம் **பூமியின் கடைசிப் பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்** என்று இதையே **ஏசாயா 44:8**இல் நீங்களே என் சாட்சிகள் என்று கூறியிருக்கிறார். **"எம்மை தாயின் கர்ப்பத்திலேயே தெரிந்துக் கொண்ட பரலோக பிதா இன்றும் உயிருள்ளவராய் கிரியை செய்கிறார்."** ஆகையால் **நீங்கள் பயப்படாதீர்கள், கலங்காதீர்கள்!** இன்றும் பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தும் தேவன் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவராக உங்கள் வாழ்வில் செயல் புரிய வல்லவராயிருக்கிறார். இன்றும் உங்களைப் பெலப்படுத்தி வழிநடத்தும்**வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் ஆத்தும நேசரே! என்னை உங்கள் சாட்சியாக அழைத்ததை நினைவுப்படுத்தி என் இருதயத்தின் பயம் கலக்கத்தினை அகற்றி என்னை பெலப்படுத்தி எனக்கு தயைகூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின்மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்."
(உபாகமம் 14:2)

ஜீவ மன்னா

ஜூலை 22
புதன்

# தம் கரங்களினால் எம்மைத் தாங்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 27 – 28

**"...இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்."**
(எரேமியா 18:6)

அன்பான என் தேவ பிள்ளைகளே! **எம் மேல் பிரியமுள்ளவரும், போதுமானவருமான மரணத்தை ஜெயம் கொண்டவருமான இயேசுக்கிறிஸ்துவின் கரம் உங்களோடிருந்து உங்களை தாங்கி வழி நடத்தி ஆசீர்வதிக்குமாறு வாழ்த்துகின்றேன்.** தேவனைக் குறித்து அறிந்தவர்களாயும் தினந்தோறும் அவரைத் தேடுகிவர்களாயும் நாள்தோறும் அவரது வேதத்தை வாசித்தறிகிறவர்களாயும், அவரோடு உறவாடுகிறவர்களாக இருப்பதால் **நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!** ஏனெனில் **எரேமியா 18:6**இல் சொல்கிறார் **"நாங்கள் தேவனுடைய கரங்களில் இருக்கிறோம்"** என்பதாக! இதையும் இன்று நாம் அறிந்துக் கொண்டது அவரது வசனங்களை வாசிப்பதன் மூலமாக அல்லவா?

தேவ பிள்ளைகளே! இதோ இஸ்ரவேல் வீட்டாரே களிமண் குயவன் கையில் இருக்கிறது போல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் எங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பது இதற்கூடாய் வெளிப்படுகிறது இவ் வசனத்தின் ஆரம்பம் இப்படியாயிருக்கிறது. **"இஸ்ரவேல் குடும்பத்தாரே இந்தக் குயவன் செய்தது போல நான் உங்களுக்குச் செய்யக் கூடாதோ"** என்று கர்த்தர் சொல்லுகிறார். **குயவன் திரிகையினால் மண்பாண்டங்களை வனைகிறான்.** அப்படியாக அவன் களிமண்ணினால் பாண்டங்களை வனையும் போது அவன் விருப்பத்தின்படி அது திரிகையில் உருவாகாவிட்டால் அதை **உடைத்து குழைத்து மறுபடியும் தன் விருப்பத்திற்கு உகந்த பாண்டமாக திரிகையினால் உருவாக்குவான்.**

தேவ பிள்ளைகளே! உங்களுக்கு பிரச்சினைகள், கஷ்டங்கள், துயரங்கள் ஏற்படும் போது எப்படி நாம் ஆத்மீக வாழ்விலே எவ்வளவு ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை தேவன் அறிவார். ஆயினும் ஏன் இப்படியான காரியங்கள் நடக்க அனுமதிக்கிறார் என்று எண்ணி கவலைப்படாதிருங்கள்! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் அறியாதபடி உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சிறு பிழைகள் உங்கள் உள்ளாந்தரங்களிலே இருக்கக் கூடும். **உன்னதப்பாட்டில் 2:15**இல் **"திராட்சை தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள், நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே."** இந்த வார்த்தையின்படி சிறு,சிறு காரியங்கள் கூட எம் வாழ்வினை நாசப்படுத்திவிடும். ஆகையால் நாம் அவர் கையில் இருப்பதால் எம்மை **மிகப் பெருமதி வாய்ந்த நல்ல பாத்திரமாக வனைய சித்தம் கொண்டிருப்பதால், நல்ல தேவ பிள்ளையாக மாற்றும்படியாகவே அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.** அவர் கொண்டும் செல்லும் பாதையில் முன் செல்லுங்கள். அதற்கு விரோதமாய் செயல்படாதீர்கள். உங்களுக்கு **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அருமை இயேசுவே! குயவன் கையின் களி மண்ணனைப் போல் உங்கள் கரங்களில் இருக்கிறேன். உங்கள் வழிகளுக்கு விரோதமாய் இராதபடி உங்களுக்கு கீழ்படிந்து உங்கள் விருப்பம் போல் ஜீவிக்க என்னை ஆசீர்வதியுங்கள். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது." (ஏசாயா 49:16)

ஜீவ மன்னா

ஜூலை 23 வியாழன்

# புத்திமான் மௌனமாயிருப்பது தேவனின் ஆலோசனையாகும்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 29 - 30

**"ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம்."** (ஆமோஸ் 5:13)

என் பிரியமான தேவ பிள்ளைகளே! உங்களை மனப்பூர்வமாக சிநேகித்து நேசிக்கும் **ஜீவனுள்ள பரலோக தேவனின் இனிய நாமத்தினால் இப் புதிய நாளிலும் தேவனுடைய எல்லா ஈவுகளான சுகம், பெலன் சந்தோஷம், சமாதானத்துடன் மகிழ்ந்திருக்குமாறு ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன்.** தேவ பிள்ளைகளே! இப் பரந்த உலகில் வாழும் மனிதர்கள் யாவரும் தம் வாழ்வின் எதிர்பார்ப்புகள் யாவையும் நிறைவு செய்துக் கொள்ளும்படியாகவும், **எந்நாளுமே ஜெயம் பெற்றவர்களாய் சிறப்புடன் வாழும் வாழ்வை பெற வேண்டும் என்று வாஞ்சை உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.** ஆயினும் ஒவ்வொருவருடைய வாழ்விலே எதிர்பாராத அநேக விதமான பிரச்சினைகள், கஷ்டங்கள் சூழ்ந்துக் கொள்கின்ற போது வாழ்க்கையில் குழப்பமான நிலமை ஏற்படுகின்றது. ஆயினும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

அருமையானவர்களே! எம்மைக் குறித்து அநாவசியமான கதைகளினாலும், எங்களுக்கு தேவையில்லாத காரியங்களை பேசுவதாலும் தலையிடுவதாலும் எமக்கு சோதனைகளும் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். ஆகையால் ஆத்மீகர்களாகிய நாம் ஒவ்வொருவரும் **வாயை, நாவை கவனமாக பாதுகாத்து கொள்ள வேண்டும்.** இன்றைய நாளில் எமது பிரதான வசனம் சொல்லுகிறது. ஆகையால் புத்திமான் அந்தக் காலத்திலே **மௌனமாயிருக்க வேண்டும்** என்பதாக. மனிதன் எதிர் கிரியைகளை செய்வான். ஒரு மனிதன் ஒரு மனிதனுக்கு விரோதமாக வாக்குவாதங்கள் ஏற்பட்டால் **அம் மனிதனும் பதிலுக்கு வாக்குவாதங்கள் செய்வான். ஒருவனை அடித்தால் அவனும் பதிலுக்கு அடித்து துன்புறுத்துவான்.** ஒருவனுக்கு விரோதமாக மற்றவன் அவன் செய்த கிரியைகளுக்கு **அதிகமான துஷ்டகாரியங்களை செய்ய முற்படுவான்.** ஆயினும் நாம் அவ்விதமாக செயல்படக் கூடாது.

தேவ பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளாகிய எமது கொடுக்கும் வேத வசனமானது **காலம் தீமையானதாய் இருப்பதால் அமைதலாயிருக்கும்படியாகும்.** தேவபிள்ளைகளாயிருந்த போதிலும் மனிதர்கள் எம்மை எங்களுக்கு விரோதமாக தீமையான முறையில் பேசினால் நாம் அமைதலாக இருப்பது எப்படியென்று உங்களுக்கு எண்ணத் தோன்றுகிறதா? சிறியதாக ஆரம்பமாகும் பிரச்சினையை மிகப் பெரிதாக மாற்றும்படியாக எமது எதிராளியான சத்துருவானவன் எமது மனதிற்கு, உள்ளத்திற்கு பிரிவினைகளையும், குழப்பமான சிந்தனைகளையும் ஏற்படுத்தி **ஒருவருக்கொருவர் பகையை தூண்டிவிட்டு வைராக்கியத்தை உண்டு பண்ணுவான்.** அவனுடைய யோசனைகளுக்கு திட்டங்களுக்கு இடமளிக்காது அமைதியாயிருங்கள். **ஆகாதவற்றை பேசாமலும் பிரயோஜனமற்றவைகளை கதையாமலும் இருங்கள்.** ஏனெனில் சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது எனவும் வசனம் கூறுகிறது. **(நீதிமொழிகள் 10:19இல்) ஆகையால் "எங்கள் வாயின் வார்த்தைகளை கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாய் இருப்போம்." சமாதானத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல மேய்ப்பனே! எனக்கு நல்ல போதனைகளை அளிப்பவரே! காலம் பொல்லாததாய் இருக்கிறபடியால் எம்மை மௌனமாய் இருக்கும்படியாக சொல்லித் தந்தவரே நன்றி என் வாயை அமைதலாய் காத்து ஆத்மீக பாதையில் ஜெயம் பெற எனக்கு உதவியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்." (நீதிமொழிகள் 17:27)

ஜீவ மன்னா

ஜூலை 24 வெள்ளி

## சத்தியம் உங்களை விடுதலையாக்கும்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 31 – 32

**“சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.”** (பரி.யோவான் 8:32)

அருமையான தேவ பிள்ளைகளே! சத்தியத்தை அறிந்தீர்கள். சத்தியத்தால் விடுதலை பெற்றீர்கள்! ***இன்றும் சத்திய வசனங்களுக்கூடாய் வாழ்க்கை வளம் பெறவும் ஆவியானவரால் வசனத்தில் மூலமாய் பெலனடையும்படியாகவும் ஜீவனுள்ள தேவனின் நாமத்தினால் உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.*** தேவ பிள்ளைகளே! நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் தேவனை அறிந்துக் கொண்டவர்களாய் இருப்பது ***மகா அதிரஷ்டம்***! ஏனெனில் தேவ வசனத்தின் சத்தியத்திற்குள்ளாக எமது ஆத்துமா விடுதலையடைகிறது. இது இவ்வுலக வாழ் ஜனங்களுக்கு அல்ல ஆண்டவருடைய பிள்ளைகளுக்காக ***விஷேசமாக அவரால் தெரிந்து வேறுபிரிக்கப்பட்ட எமக்கு மாத்திரம் உரிமையாக்கப்பட்ட உன்னதமான வரப்பிரசாதம்.***

தேவனுடைய பிள்ளைகளே! இது ஒரே தினத்திலோ, சில தினங்களிலேயோ நடக்கும் விடயம் அல்ல நீங்கள் சிறிது, சிறிதாக தேவ வசனத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்து அது பெருகும் போது நடப்பதாகும். ஜீவமன்னா தினசரி வாசிக்கும் நீங்கள் இன்றைய வேத வாசிப்பு எனக் கொடுக்கப்படும் ***வேதத்தின் வசனங்களை இரண்டு அதிகாரங்களுக்கூடாய் வாசிக்கும் சந்தர்ப்பம் வாய்க்கப்பட்டுள்ளது.*** நீங்கள் அவைகளை கைக் கொண்டு உங்கள் வாழ்வின் கட்டுகளிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ளுங்கள். தேவ வார்த்தைகள் மூலமாய் நீங்கள் அறியாத ஆத்மீக இரகசியங்கள் வெளிப்படுத்தி சகலவற்றையும் தேவன் கற்றுத் தரும் போது அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தும் போது உங்கள் வாழ்வு வளம் பெறும். ***உங்கள் வாழ்வில் வெற்றியை பெற்றுக் கொள்ள முடியும்.***

தேவ பிள்ளைகளே! சில ஆத்மீகர்கள் சில வேத வசனங்களை கற்றறிந்து தாம் யாவற்றையும் அறிந்தவர் என காண்பிக்கும்படிக்கு செயல்படுவார்கள். ***நீங்கள் அப்படி செய்யாதீர்கள்.*** உதாரணமாக பாடசாலைக்கு செல்லும் மாணவன் ஒரு வருட காலமாக தான் கற்ற சகல பாடங்களையும் வருட முடிவில் பள்ளியில் நடத்தப்படும் பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தனியாக பதிலளிக்கும்படியாக கற்கும் ஒவ்வொரு பாடங்களில் காணப்படும் முக்கியமான காரணங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள அவசியமாகிறது. ***அதே போல் தேவனுடைய வேத வசனங்களை வாசிக்கும் நாமும் அவைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.*** எம்மை எதிர் நோக்கும் சகல பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டங்களின் போது அவ்வார்த்தைகளை தியானித்து அறிக்கைப் பண்ணி, வார்த்தைகளின்படி நடந்து, பெலனடைந்து ***சகலவற்றிலும் மிகுந்த வெற்றியை பெற வேண்டும்.*** இன்றிலிருந்து தேவ வசனங்களை கருத்தோடு வாசித்தறிந்து ஆத்மீக அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள் செயல்படுங்கள். இன்று ***உங்களுக்கு வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே! உங்கள் ஜீவனுள்ள வார்த்தைகளுக்கூடாய் எங்கள் ஆத்துமாவின் கட்டுகளை முறிக்கிறவரே உங்களை ஸ்தோத்தரிக்கிறேன்! வேத வசனங்களை வாசித்து சத்தியத்தை அறிந்து இருதயத்திலே பதித்து வைத்து வாழ்வினிலே ஜெயம் பெற தயை கூறுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

“என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்.” (நீதிமொழிகள் 8:34)

ஜீவ மன்னா

ஜுலை **25**

சனி

# எம்மை திடப்படுத்தி பெலப்படுத்தும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 33 – 34

**"தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்."** (ஏசாயா 35:3)

என் பிரியமான தேவ பிள்ளைகளே! அழைத்தவரும் உண்மையுள்ளவரும் கடைசிபரியந்தம் எம்மை வழி நடத்த வல்லவருமான ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களனைவரையும் புத்தம் புதிய மனமகிழ்ச்சியாய் வாழ வாழ்த்துகின்றேன்.** ஜெயம் பெற்றவர்களாய் வாழும் இப் பூமியில் மனிதர்கள் எல்லோரிடமும் **ஆத்துமாவிலே பெலவீனமும், சோர்வுகளும் இயல்பாகவே காணப்படுகிறது.** ஆகையால் எம்மை உருவாக்கின தேவன் எம் கரங்களுக்கு பெற்றுக் கொடுத்த **பரிசுத்த வேதாகமத்தில் ஏறக்குறைய 365 இடங்களில் பயப்படாதீர்கள்! என எழுதப்பட்டிருக்கிறது.**

தேவ பிள்ளைகளே! வேதாகமம் சம்பூரணமாய் உருவாக்கப்பட்டதன் பின்னரே இக் கணக்கெடுப்பு நடந்துள்ளது. ஆகையால் தேவனுடையவர்களாய் விளங்கும் நாங்கள் எதிர்காலத்தை குறித்தாகிலும் இம்மட்டும் நாம் நிலை நிற்கிற ஆத்மீக நிலைமையைக் குறித்தாகிலும். அல்லது இவ்வுலக காரியங்களில் பெற்றுக் கொண்ட **ஆசீர்வாதம் இல்லாமல் போய்விடுமா என்று பயபடத் தேவையில்லை.** மாறும் சமுதாயத்தை குறித்தோ, இன்றைய காலத்தின் நடைமுறைகளைக் குறித்தோ, பயப்படாதீர்கள்! **ஏசாயா 35:3**இல் **"தளர்ந்த கால்களைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களை பலப்படுத்துங்கள்."** ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! தேவன் உங்களோடிருப்பதால் **உங்களை பரிசுத்தாவியினால் நிரப்பி, வல்லமைப்படுத்தி, திடப்படுத்தி முன்னோக்கி நடத்திச் செல்வார் என்பதை விசுவாசியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! எம் கர்த்தர் **ஏசாயா 45:2**இல் உரைக்கிறார். **"நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வையாக்குவேன் என்றும் வெண்கலகதவுகளை உடைத்து இரும்புத் தாழ்ப்பாள்களை முறிப்பேன்"** என்பதாகவும். **பரி.மாற்கு 8:34**இல் **"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தானே வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின் பற்றக்கடவன்"** என்றும் கூறியுள்ளார். ஆகையால் எவ்வகையான **கஷ்டங்கள், சோதனைகள், சவால்கள் ஏற்படினும் பயப்படாமல் சாத்தான்** கொண்டு வரும் சூழ்ச்சிகளால் எம் உள்ளத்தில் சரீரத்தில் ஏற்படும் ஆசை இச்சைகளுக்கு இடமளித்துவிடாமல் ஆத்மீக ஜீவியத்தில் முன்னோக்கிச் செல்லுங்கள். இன்று முதல் தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி தள்ளாடுகிற முழங்கால்களை பலப்படுத்துங்கள். உங்களுக்கு **இன்றைய நாள் ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் அன்பு தேவனே! நீங்கள் என்னை பெலப்டுத்துகிறவருமான தேவனாயிருக்கிறபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்! இயேசுகிறிஸ்துவைப் போல மாற்றி அவரைப் போல் மாறும்படியாக அழைத்தவரே அதன்படி வழி நடக்க ஜீவிக்க, ஆத்தும பெலத்தையும், சக்தியை தந்தருளமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (2 கொரிந்தியர் 12:9)

ஜீவ மன்னா

ஜுலை 26 ஞாயிறு

# அதிகாலையில் தேடுபவர்களுக்கு தேவன் சகாயம் பண்ணுவார்!

இன்றைய வேதவாசிப்பு

2 நாளாகமம் அதி: 35 - 36

**"தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்."** (சங்கீதம் 46:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பரலோகத்திலே இருக்கிற பிதாவின் கிருபை பூமியின் மீது இறங்கிக் கொண்டிருக்கும் **இதமான காலைப் பொழுதிலும் அவருடைய உதவி, ஒத்தாசை, உபகாரம் யாவும் உங்களுக்கு கிடைத்து ஆசீர்வாதமாய் வாழ இயேசுவின் நாமத்தில் மன நிறைவுடன் வாழ்த்துகிறேன்.** இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அநேகர் தத்தமது மதவழிபாடுகளிலும், பக்தி மார்க்கங்களிலும் ஈடுபாடுள்ளவர்களாகவும், சம்பிரதாய சடங்குகளை கைக் கொள்கிறவர்களாகவும் விளங்குகிறார்கள். நாங்களும் நம் தேவனானவர் **தம் ஜீவனுள்ள திரு வசனங்கள் வாயிலாக எமக்கு எவைகளை வெளிப்படுத்தியுள்ளாரோ அதன்படி அவரைத் தேடுபவர்களாய் இருப்போம்.**

தேவ பிள்ளைகளே! எம் தேவனாகிய கர்த்தர் அருபியாய், ஜீவனுள்ளவராய் கிரியை செய்கிறவராய் இருக்கிறபடியால் **ஆவியோடும், உண்மையோடும் அவரை தேடுபவர்களாய் இருக்கக்கடவோம்.** அவருடைய திருவசனமான **சங்கீதம் 46:5**இல் கூறுகிறது. "**அதிகாலையில் தேவன் சகாயம் பண்ணுவார்**" என்பதாக. இன்னுமாய் **சங்கீதம் 30:5**இல் "**அவருடைய கோபம் ஒரு நிமிஷமும் அவருடைய தயவோ நீடிய வாழ்வு சாயங் காலத்தில் அழுகை தங்கும் விடியற் காலத்திலே களிப்புண்டாகும்.**" ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** அதிகாலையில் கர்த்தரை தேடும்படியாக பழகிக் கொள்ளுங்கள். அப்பொழுது அவருடைய புதிய கிருபை உங்களை மூடிக் கொண்டு உங்கள் ஆத்துமாவிலிருக்கிற பலவீனம், குறைகளை போக்கி ஆத்தும பெலத்தை தரும்.

தேவ பிள்ளைகளே! தினமும் பிரதான நேரத்தையும், இடத்தையும் அவருக்களித்து **அவரைத் தேடுங்கள். அவர் முகத்தை தரிசியுங்கள்.** ஒவ்வொரு நாள் ஜெப வேளையிலும் ஒரே காரியங்களை குறித்து அட்டவணை ஒன்றை தயார் செய்து அதைக் கூறிக் கொண்டு ஜெபிக்காதீர்கள். **மிக அவசர அவசரமாக ஜெபித்து விட்டு ஓடாதீர்கள், குழப்பமான ஜெப வேளையாக ஜெப நேரத்தை வீணாக்காதீர்கள். ஜெபிக்க அமர்ந்தவுடனே விண்ணப்பங்களை ஏறெடுக்காதீர்கள்.** முதலில் அவரது தேவ பிரசன்னம் எம் மத்தியில் கடந்து வரும் வரையும் ஆவியானவர் உங்களை நிரப்பும் வரையும் தேவ பாதத்தில் காத்திருங்கள். அவரது அன்பை, கிருபையை, தயவை தியானித்து நன்றிகளை ஏறெடுத்து, துதித்து மகிமைப்படுத்தி அவர் நாமத்தை உயர்த்துங்கள். அப்போது **தேவ சமூகம் உங்கள் மத்தியில் கடந்து வந்து ஆவியானவர் உங்களை நிரப்பி எப்படி ஜெபிக்க வேண்டும், எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுத் தருவார்.** வார்த்தைகளை உங்களுக்கு அருளுவார். பொருத்தனைகளை ஞாபகப்படுத்தி, பிழைகளை உணர்த்துவார், வழி காட்டுவார். **ஆவியானவரோடு இணைந்து ஜெபிப்பதின் பிரதிபலனாக தேவ அநுக்கிரகம், ஆசீர்வாதம் உபகாரம் இவ்வாறு பலவிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இன்றைய நாள் கிருபையின் நாள்!**

ஜெபம்

என் அன்புள்ள தேவனே! அதிகாலையில் உம் முகத்தை பார்க்க உம்மைத் தேட எமக்கு வழி காட்டுபவரே நன்றி! இயேசுகிறிஸ்துவே நானும் உம்மை அதிகாலையில் தேடும்படி கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தனக்குப் பதில்கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள்." (யோபு 41:11)

ஜீவ மன்னா

ஜூலை 27 திங்கள்

# அற்பமான ஆரம்ப நாளை யார் அசட்டை பண்ணலாம்!

இன்றைய வேதவாசிப்பு

எஸ்றா அதி: 01 – 02

"அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?..."
(சகரியா 4:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மலருகின்ற புதிய தினத்தில் **இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தை விசுவாசித்து உங்கள் வாழ்க்கையின் சகல காரியங்களிலும் ஜெயத்தை பெற்றுக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன்.** மேலே தரப்பட்டதான எமது பிரதான தேவ வசனத்தில் "**அற்பமான ஆரம்ப நாளை யார் அசட்டை பண்ணலாம்.?"...** என்பதாக. அதன்படி சிறிதான ஆரம்பத்தை நாம் சிறுமையாய் எண்ணக் கூடாது என அர்த்தம் கொள்ளலாம். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

பிரியமானவர்களே! நிகழ்காலத்தில் உலகின் ஜனத் தொகையைக் குறித்து கணக்கீடுகளை கவனிப்போமாகில் **உலக ஜனத்தொகை சுமார் 700 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.** இதன் ஆரம்பத்தைக் குறித்து வேதாகமத்தின்படி **எம் கர்த்தர் ஒரேயொரு பெண்ணையும் ஆணையும் மாத்திரமே உருவாக்கினார்.** ஆண்டவர் அவர்கள் **பூமியில் பலுகிப் பெருகி பூமியை கீழ்படுத்தி ஆண்டுக் கொள்ளும்படி ஆசீர்வதித்தார். ஆகவே ஜனத்தொகை தற்போது 700 கோடியாக பெருகியிருக்கிறது.** கர்த்தர் தாமே யாவரையும் போஷிக்கிறார். எம் வாழ்வினிலே நாம் சிறிதாக ஆரம்பிக்கும் காரியங்கள் யாவும் சில காலம் செல்லும் போது வளர்ந்து பெருகும்படியாக மாற்ற **தேவனால் கூடும்.**

தேவ பிள்ளைகளே! விவசாயம் செய்யும் வயல் வெளிகளை நோக்கிப் பார்த்தால் அவைகளை பயன்படுத்தி **நெல்லை விதைத்து நீரபாய்ச்சி மறுநாள் அதை பார்க்கும் போது அது அப்படியே காட்சியளிக்கும் முனைகளை காண முடியாது.** இரண்டு மூன்று தினங்கள் கழித்து வயலை நோக்கிப் பார்த்தால் பச்சை நிறமாக விதைகள் முளைத்திருப்பதை காணலாம். அதன் பிறகு உரமும் நீருமிட்டு சரியாக அவற்றை பராமரிக்கும் போது **ஏற்ற காலத்தில் மிகுந்த அறுவடையை நாம் பெறலாம்.** எம் வாழ்க்கையும் இது போன்றே காணப்படுகிறது. உலகில் மனம் போன போக்கில் வாழ்ந்த எம்மை தேவன் தெரிந்துக் கொண்டபடியால் **எம் இரட்சகர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து அவரை எம் வாழ்வில் ஏற்றுக் கொண்டோம்.** இப்படியான வாழ்விலே நெல்லை விதைத்த நிலமாக ஒரு மாறுதலும் இல்லாமல் இருக்கலாம். சிலகாலம் சென்றதன் பின்பு வயலைப் போல் எம் வாழ்விலும் மாறுதலை ஆசீர்வாதத்தை, சுகத்தை, ஆரோக்கியத்தை, உயர்வைக் காணலாம். **நீங்கள் முழு உள்ளத்தோடு அவரில் நிலைத்திருங்கள்.** அவரை விசுவாசித்து எதிர்பார்ப்போடு இருக்கும் போது மகா பெரிய ஆசீர்வாதத்தை நீங்கள் அநுபவிக்கலாம் இன்று ஆசீர்வாதத்தின் நாள்!

**ஜெபம்**

என் இரட்சகரான இயேசுவே! உங்கள் பிள்ளையாக மாற்றி என்னை ஆசீர்வதிக்கும்படியாக என் வாழ்விலே மாறுதலை உண்டு பண்ணிய போதிலும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் கலங்கிய என்னை இன்றைய தினத்தில் உங்களில் நிலைத்திருந்து பலத்த ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள கற்றுக் கொடுத்த என் தேவனே! என்னை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்."
(எசேக்கியேல் 34:26)

ஜீவ மன்னா

ஜூலை 28
செவ்வாய்

# உங்களை தேவ ஆவியானவர் வழி நடத்த ஒப்புக் கொடுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

எஸ்றா
அதி: 03 - 04

**"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்."** (கலாத்தியர் 5:16)

அருமையான தேவ பிள்ளைகளே! சாவை வென்றவரும் ஜீவனோடே எழுந்தவருமான **இயேசுகிறிஸ்தவின் வல்லமையான நாமத்தினால் சமாதானம் நிறைந்த நாளாக விளங்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** எம்மை உருவாக்கி ஜீவனளித்து காத்து வழி நடத்தும் எம் தேவன் மிக நல்லவரே தன்னால் படைக்கப்பட்ட **மனிதர்களை துன்பத்திலும், வேதனையிலும் இருந்து விடுவிக்கும்படியாகவும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அளிக்கும்படியாகவும் இம் மண்ணுலகத்திற்கு மனிதனாக வெளிப்பட்டார்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய எமது பிரதான தேவ வசனமாகிய **கலாத்தியர் 5:6இல் இப்படி எழுதப்பட்டுள்ளது. அதாவது "மாம்சமான சரீரத்திலே பலவகையான ஆசைகளும், இச்சைகளும் உள்ளடங்கியிருக்கக் கூடும்."** எமது உள்ளத்திற்கு விருப்பமான காரியங்கள் அநேகம் இருக்கலாம். ஆயினும் தேவ பிள்ளைகளாகிய எம் மனம் விரும்புகிறபடியே, மனம் போன போக்கெல்லாம் போக முடியாது. ஆயினும் எமது ஆத்தமா மிக பலன் குன்றியிருந்ததால் எம்மையறியாமலே உள்ளத்தின் ஆசை, இச்சைகள் செயல்பட நாம் அனுமதித்து விடுவோம். ஏனெனில் **எங்கள் ஆத்துமா தோல்வியை காணச் செய்யும், சரீரம் வெற்றி பெறும்.** ஆனாலும் **கலாத்தியர் 5:16** இப்படி கூறுகிறது **"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால் ஆவிக்கேற்றபடி நடந்துக் கொள்ளுங்கள் அப்போது இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்"** என்பதன் பிரகாரம் எம் பரலோக பிதா எமக்களித்துள்ள பரிசுத்த ஆவியானவர் மூலமாக மாம்சத்தின் கிரியைகளை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும்.

தேவ பிள்ளைகளே! தேவ ஆவியானவரால் நாம் வழி நடத்தப்படுவோமாகில் எம் வாழ்க்கை தேவனோடு இணைந்திருக்க வேண்டும். **அவரோடு ஐக்கியப்பட்டிருக்கும்படியாக எமது ஜெப ஜீவியத்தை பெருகிக் கொள்ள வேண்டும்.** ஜெபமே எமது உறவைப் பலப்படுத்தும் நாம் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவே தேவனுடைய ஒரே குமாரன் என்று ஏற்றுக் கொண்ட நாள் முதல் அவர் ஆவியானவர் **எமக்குள் வாசம் பண்ணும்படியாக எம் உள்ளத்தில் எழுந்தருளினார்.** ஆகையால் நாள்தோறும் இடைவிடாமல் தேவ பாதத்தில் ஜெபத்தின் மூலமாக **அவரோடு உறவாடி தேவ ஆவியானவரின் உறவை பெலப்படுத்தி அதிகரித்துக் கொள்ளுங்கள். அப்படியே அவரால் நாம் பெலனடையும் போது மாம்சமான சரீரத்தின் இச்சைகள் தோல்வியடையும். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

எங்கள் அன்பின் தேவனே! உங்கள் தேவ ஆவியானவர் மூலமாக எம் சரீரத்தின் இச்சைகளை அகற்றி போட முடியும் என விசுவாசிக்கிறேன்.
ஆகவே என்னை பரிசுத்தாவியால் நிரப்பி வல்லமையினால் பெலப்படுத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்." (பிலிப்பியர் 3:21)

ஜீவ மன்னா

ஜூலை **29**
புதன்

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு தம் சொந்தப் பிள்ளைகளாகும்படிக்கு பாக்கியத்தை கொடுப்பார்!

இன்றைய வேதவாசிப்பு
எஸ்றா
அதி: 05 - 06

**"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."**
(பரி.யோவன் 1:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! தகுதியற்றவர்களுக்கு கிருபையளித்து தம் சொந்தப் பிள்ளைகளாக மாற்றிய ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமை மிகுந்த நாமத்தில் **இன்றைய நாளிலும் உங்களை மனமகிழ்ச்சியாய், சந்தோஷமாக வாழ வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளின் இவ் ஜீவ மன்னா தினமஞ்சரியின் **தினசரி இதழை வாசித்து கர்த்தரின் அன்பை ருசி பார்க்கும் நீங்களனைவரும் அதி விஷேசித்தவர்கள்!** ஏனெனில் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி தெரிந்துக் கொண்டு அவருக்கே நமஸ்காரம் செய்து அவரிலே விசுவாசம் கொண்ட நாம் ஒவ்வொருவரும் **பரலோகத்திலே வாசம் பண்ணும் பூமியிலே கிரியை செய்யும் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் சொந்தப் பிள்ளைகளாயிருக்கிறோம்.**

தேவ பிள்ளைகளே! **பரி. யோாவன் 1.11**இல் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை ஆயினும் நாம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளைகளாக காணப்படுவதினால் **நாம் அதிரஷ்டசாலிகள் ஆவோம்.** அவரையே விசுவாசித்து வாழும் நாம் அவரோடு கூட தேவ பிதாவின் புத்திர **சுவீகாரம் பெற்ற பிள்ளைகளாகும் உரிமையையும், வரப்பிரசாதத்தையும் பெற்றுள்ளோம்.** நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே என **ரோமர் 8:17**இல் எழுதப்பட்டுள்ளது. **"எங்கள் ஆண்டவராகிய தேவன் பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் அதிபதியாக ஆளுகை செய்யும் கர்த்தராவர்." அவருடைய உரிமையாளர்களாகிய நாங்களும் பரலோகத்தின் ஆசீர்வசாதங்களுக்கும், பூலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கும் உரிமையாளர்கள் ஆவோம்.**

தேவ பிள்ளைகளே! ஆத்மீக தேவ பிள்ளைகளாகிய நாம் எம் எதிர்காலங்கள், எம் பிள்ளைகளின் வருங்காலங்களை நினைத்து யோசனை செய்ய வேண்டிய அவசியமில்லை இத்தனை காலமாக தேவ பிள்ளையாக வாழ்ந்த போதிலும் என் வாழ்க்கையில் **எந்த விதமான முன்னேற்றமும் இன்னும் ஏற்படவில்லை என அங்கலாய்த்து உள்ளத்தை கலங்கவைக்கவோ, மனம் வெறுக்கும்படியாகவோ இடமளிக்காதீர்கள்.** உங்களைத் தம்மிடத்தில் அழைத்துவரும் தேவனுக்குரியவர்கள் என்று புத்திர சுவிகாரத்தை அளித்தவரும் அவரே! தமது வாயின் வார்த்தைகளை ஒரு போதும் வீணாகிப் போக விடாதவருமான இயேசுகிறிஸ்து உங்கள் வாழ்வில் காணப்படும் குறைகள், வறுமைகளை போக்கி **உங்கள் வாழ்க்கை வீணாகிப் போகாமல் காத்து உங்களுக்குச் சொந்தமான சகல ஆசீர்வாதங்களையும் நல்கி உங்களை உயர்த்துவார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! என் தேவனே! எமக்கு இரட்சிப்பைக் கொடுத்து உம்மை அறிந்துக் கொள்ளும் சலாக்கியத்தையும், உம்முடைய புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக் கொள்ளவும் கிருபை செய்தீரே உமக்கு நன்றி! அத்தோடு பரலோக, பூலோக ஆசீர்வாதங்களைப் பெற்று ஆவியோடும், உண்மையோடும் வாழ என்னை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்."
(கலாத்தியர் 4:5)

ஜீவ மன்னா

ஜூலை 30 வியாழன்

# கிருபையும் சத்தியமும் தேவனால் உண்டானது!

இன்றைய வேதவாசிப்பு

எஸ்றா அதி: 07 - 08

**"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின."** (பரி.யோவான் 1:17)

தேவனுக்கு உகந்தவர்களே! மகிமையின் தேவனும் மகத்துவமானவரும் பரிசுத்தருமான **இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தினால் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.** ஆண்டவருடைய அநுக்கிரகம் கிடைக்கப் பெற்றவர்களே! **நீங்கள் பாக்கியவான்கள்**! ஏனெனில் நியாயப்பிரமாணங்களும், வாக்குறுதிகளும், சட்டத்திட்டங்களும், நடைமுறைகளும் மோசே என்னும் மனிதனுக்கூடாய் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனால் அருளப்பட்டது. **மனிதர்கள் இவைகளுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். இவைகளைக் கைக்கொள்வது மிக அவசியமானதாகும்.**

தேவ பிள்ளைகளே! அவருடைய நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு வசனத்தையும், கட்டளைகளையும் மனிதர்கள் நிறைவேற்றுவது கடமையாகும். **அதை மீறும் மனிதன் குற்றவாளியாவான்.** ஒருவன் நியாயபிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் என்று வேத வசனம் கூறுகிறத. **ஓய்வு நாளை பரிசுத்த நாளாய் அனுசரிக்கும்படியாகவே அன்று பரிசுத்த ஓய்வு நாளை வேலை செய்பவர்களை கல்லெறிந்து கொலை செய்யபடக்கடவன் என்றும் ஓய்வு நாளில் வாசஸ்தலங்களில் எங்கும் நெருப்பு மூட்டாதிருப்பாதீர்களாக என்றும் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! தற்போது தேவனுடைய அநுக்கிரகத்தால் நாங்கள் கிருபையின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக் கிருபை எம்மை நோக்கி கடந்து வந்தது **பரத்திலே வாசம் பண்ணுகிற தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே.** இந்நாட்களில் விஷேசித்த தயவு என்னவெனில் கிறிஸ்துவானவருக்கூடாக பரிசுத்த ஆவியானவரை எமக்களித்த தேவன், எமது வாழ்வினை ஆவியானவர் மூலமாக கறைதிரையற்ற பரிசுத்த வாழ்வு வாழும்படியாகவே ஒத்தாசை புரிகிறார். **எம்மை சரியான பாதையில் வழி நடத்துகிறார்.** ஆகையால் உங்கள் இருயதம் கலங்காதிருப்பதாக! ஆயினும் இப்போது மோசேயின் காலத்தைப் போலில்லை நியாயபிரமாணத்தையே கடைப்பிடிக்க வேண்டுவதில்லை. **இது கிருபையின் காலம் அநுக்கிரகத்தின் நாட்களில் இருக்கிறோம்.** ஆகையால் மனப்போன போக்கில் வாழலாம் என்பதில்லை, குற்றம், குறைகள், பாவங்கள் செய்யக் கூடாது. மோசேயின் மூலமாய் நியாயப்பிரமாணங்களை எமக்கருளிய ஆண்டவர் தமது அன்புக் குமாரனை உலகிற்கு அனுப்பி **எம் பாவங்களுக்கு மன்னிப்பை அருளி மறுபடியும் எம் அவரண்டை கிட்டச் சேர்த்துக் கொண்டார்.** ஆனபடியால் அவருடைய அநுக்கிரகத்தை, கிருபையை அலட்சியமாக, குறையாக எண்ணி விடாதீர்கள். **தேவனுக்கு பயப்படும் பயம் எப்போதும் உங்கள் உள்ளத்தில் இருக்க வேண்டும். இன்று தேவ அநுக்கிரகத்தின் நாள்**!

ஜெபம்

எம் பரலோக தேவனே! உங்கள் குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எமக்களித்த அநுக்கரகத்திற்காய் நன்றி! கிருபையான காலம் என்பதால் குறைகளை நினையாமல் எம் குறைகளை மன்னித்து உம்முடைய சித்தம் போல் ஜீவிக்க கிருபை செய்தருளுமாறு

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது." (ரோமர் 6:14)

ஜீவ மன்னா

ஜூலை 31 வெள்ளி

## தேவ கோபம் சரீரத்தில் வியாதியை உண்டாக்கும்! நித்திய கிருபை ஆரோக்கியத்தை தரும்!

இன்றைய வேதவாசிப்பு

எஸ்றா அதி: 09 - 10

**"உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை."** (சங்கீதம் 38:3)

தேவனுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! கர்த்தருடைய பெரிதான கிருபைகளுக்காகவும், இரக்கங்களுக்காவும் கர்த்தருக்கே நன்றி! **இம் மாதத்தை எமக்கு கொடுத்து எம்மை வழி நடத்தி இக் கடைசி நாளிலும் அவர் சமுகத்தில் நிற்கும் உங்களை ஆசீர்வதிக்க காத்திருக்கும் இயேசு என்னும் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.** இப் பூமியில் வாழும் மனிதர்கள் அநேக நோய்களினாலும். வேதனையினாலும், உபத்திரவத்தினாலும், **பரிதாபகரமான நிலையில் தத்தளிக்கிறார்கள்.** இவ் விஞ்ஞான உலகத்திலே இன்னும் வைத்திய பரிகாரங்கள், மருந்துகள் கண்டு பிடிக்கப்படாத நோய்களும் மனிதர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் **எம் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகளாக திகழப்படுகிறார்கள்.** ஏனெனில் அவர் எமக்காய் பட்ட கசையடிகள் மூலமாக எம்மை சுகமாக்குவதாக வாக்களித்துள்ளார். அந்த பொருத்தனையின்படி எமக்குள் இருக்கும் **எல்லா நோய்களையும், தீராத வியாதிகளையும் அவர் சுகமாக்க வல்லவராயிருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! **அவரால் குணமாக்க முடியாத எந்த நோயும் உலகில் இல்லையென்று கூறினால் மிகையாகாது.** ஆகையால் தேவ பிள்ளைகளாகிய **நாங்கள் சாத்தானுடைய சோதனைகளின் நிமித்தம் எமக்கு ஏற்படும் நோய்களை குறித்து பயப்படாதீர்கள்**! ஏனெனில் எம்மை குணமாக்க வல்லவர் எம்மோடிருக்கிறார். ஆயினும் இன்றைய இச் செய்தியின் பிரதான வசனம் **சங்கீதம் 38:3**இல் கூறுகிறது **"உமது கோபத்தினால் என் மாம்சத்தின் ஆரோக்கியமில்லை என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை"** என்று. எங்கள் ஆத்மீக வாழ்விற்கு விரோதமாக சாத்தான் எந்த நேரமும் செயல்பட காத்திருக்கிறான். ஆயினும் தேவன் தாமே சாத்தானுக்கு இடம் கொடாது அவர் நேசிக்கும் **அவரது பிள்ளைகளுக்கு அவர் எப்போதும் பாதுகாப்பளித்து காத்துக் கொள்கிறார்.**


அன்பார்நதவர்களே! நாம் அவருக்கு கீழ்படியாது, அவரது வார்த்தைகளுக்கு செவி கொடாது தொடர்ந்து குற்றம் செய்துக் கொண்டிருந்தால் **அவர் கோபமடைந்து அவர் எம்மை சிட்சிப்பார்.** பிரம்பினால் எம்மை அடிப்பார் **நீதிமொழிகள் 23:13,14** இல் பார்ப்போம். **"பிள்ளையை தண்டியாமல் விடாதே அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே"** என்று எழுதப்பட்டுள்ளது. ஆகையால் இன்றைய தினம் நீங்கள் உங்களை ஆராய்ந்தறிந்து உங்களில் குற்றம், குறைகள், பிழைகள், காணப்படுமாயின் ஆண்டவரிடம் உங்களை தாழ்த்தி **உங்களை மன்னிக்கும்படி ஜெபங்களை ஏறெடுப்பீர்களென்றால் அவர் உங்களை மன்னித்து திரும்பவும் அவரண்டையில் சேர்த்துக் கொள்வார்.** உங்களுக்கு அவர் நிரந்தரமான சுக்தேகியான, ஆரோக்கியமுள்ள சுகத்தையும், பெலத்தையும் நீண்ட ஆயுளையும் தந்து **உங்களை ஆசீர்வதிப்பார்.** இன்றும் தேவனுக்கே மகிமை உண்டாவதாக! **ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

எமக்கு ஆராக்கியம் தரும் பரிகாரியான கர்த்தாவே! நாம் கீழ்படியாததின் நிமித்தம் கோபம் கொண்டு எம்மை தண்டிக்கும் போது என் சரீரம் வியாதிப்படும் என்று அறிந்துக் கொண்டேன். என்னை மன்னித்து மீண்டுமாக உமது கிருபையால் எமக்கு இரங்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்." (ஏசாயா 54:8)



09. சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் தேவன் செய்கின்ற அளப்பரிய வல்லமையான காரியங்களுக்காக நன்றி செலுத்தும் முகமாக ஒவ்வொரு திங்களும் காலை 9.30 மணி முதல் 10.30 வரை விஷேட ஸ்தோத்திர ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.

10. அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை விஷேட உபவாச ஜெபம் நடைபெறும்.


11. மாதத்தில் முதல் வெள்ளியைத் தவிர்ந்த எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இரவு 9.00 மணி முதல் அதிகாலை 1.00 மணி வரை சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனைக்காக ஜெபிக்கப்படும்.

12. அனைத்து ஜெபங்களும் சரியான நேரங்களில் ஆரம்பிப்பதோடு எந்தவித காரணங்களாலும் ஜெபங்கள் தடைபடாது நடைபெறும்.

13. பரிசுத்த ஆவியானவரின் ஆலாசனைகளின்படி தேவ ஊழியங்களை நடத்துவதானல் குடும்ப அங்கத்தினர்களும் ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

14. அனைத்து முழு நேர ஊழியர்களுக்கும் அவர்களின் சொந்த வாழ்வின் கடமைகளை நிறைவேற்றுமுகமாக சம்பளம் கொடுக்கின்றோம்.

15. அனைத்து தேவ ஆராதனைகளும் மனிதர்களின் எந்த ஆலோசனையுமின்றி தேவ ஆவியானவரின் விருப்பத்தின்படி உரிய நேரத்தில் ஆரம்பித்து சனிக்கிழமை ஆராதனை 4 மணி நேரம், அதிகமான ஜனங்கள் வருகை தந்திருப்பின் 6 மணி நேரம் வரை, ஞாயிற்றுக்கிழமை ஆராதனை 3 மணி நேரமுதல் 4 மணி நேரம் வரை நடைபெறும்.



16. சபையின் பணத் தேவைகள் அனைத்தையும் விசுவாசத்தோடு ஜெபித்து பெற்றுக் கொள்கிறோம்.

17. ஆவியானவரின் வழி நடத்துதலின்படி கொழும்பு பிரதேசத்திலும், வெளிமாவட்டங்-களிலும் நற்செய்தி கூட்டங்களை நடத்துகின்றோம்.


18. தேவனின் சித்தத்தின்படி வெளிநாடுகளில் அழைப்புகள் வருவதன் பிரகாரம் அங்கே போய் நற்செய்தி கூட்டங்களை நடத்துகிறோம்.

19. தேவ பிள்ளைகளின் ஆத்மீக வளர்ச்சிக்காக தினந்தோறும் வாசிக்க ஜீவ மன்னா தினமஞ்சரி, மைக்ரோ சிப், பிரசங்கங்கள், CD தட்டுகள் ஆகியவையும், வெளிமாவட்டங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் தபால் மூலமும் அனுப்புகிறோம்.

அன்பார்ந்தவர்களே! எங்கள் ஊழியத்தின் ஒழுங்கு நடைமுறைகள் மூலமாக யாருக்குமே அறிவித்தல் கொடுக்கவோ கூறவோ நான் முன் வரவில்லை. ஆத்மீகமாக தாகத்தோடு தேவ இராஜ்யத்தைக் குறித்து பசியோடு இருக்கும் யாரகவிருப்பினும் இதை வாசித்து தேவையானவைகளிருப்பின் பெற்றுக் கொள்ளுங்கள். வெற்றி பெறுங்கள். இதைக் குறித்து அதிகமாக அறிந்துக் கொள்ள அவசியமேற்படின் எங்கள் தொலை பேசி இலக்கங்களோடு தொடர்புக் கொள்ளுங்கள். உங்கள் சபைகளை அபார வெற்றியுடன் முன் கொண்டு செல்லம்படியாக வாழ்த்துகின்றேன்.



ஆவிக்குரிய செய்தி
தலைமைப் போதகர் ஏ.ஜே.ஜோசப்




# அட்டைப்பட விளக்கம்

ஜீவ மன்னா தினமஞ்சரியின் 46வது வெளியீட்டைத் தயாரித்து, தொகுத்து உங்கள் கரங்களில் கிடைக்க தேவன் அளித்த அளவற்ற கருணைக்கும், அளவற்ற அநுக்கிரகத்திற்காகவும் தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக! நாங்கள் சிறிதளவில் ஆரம்பித்த ஜீவமன்னா தினமஞ்சரி இம்மட்டுமாக தேவனின் அநுக்கிரகத்தினால் வளர்ச்சியடைந்திருப்பதைக் குறித்து நானும் இதை ஆவலோடு தொகுத்தளிக்கும் எனது உடன் ஊழியர்கள் அனைவரும் பெரும்மகிழ்ச்சியடைகிறோம்.

பரி.மத்தேயு 13:31இல் இருந்து 33 வரை பரலோக இராஜ்யத்தின் வளர்ச்சியைக் குறித்து கூறப்பட்டுள்ளது. கடுகு விதை உவமைக் கூடாக தேவன் மனுஷன் அதை எடுத்து தன் நிலத்தில் விதைத்தான் கடுகு விதைக்கு தேவ இராஜ்யம் சமனாகும். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும் வளரும் போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்று கூறுகின்றார். இதில் நாம் அறிந்துக் கொள்வது பரலோக இராஜ்யத்தின் காரியங்கள் இப் பூமியில் பரவுகின்ற பொழுது சிறிதளவில் ஆரம்பித்து பெரிய அளவில் வளர்ச்சியடைவதையே, அது அறிவு பெலத்துடன் வளர்வதோடு சாத்தானால் அழிக்க முடியாது. அதை அழிக்க அதற்கு சமனான வேறோரு வல்லமையில்லை.

ஆப்படியே பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவன் என் உள்ளத்தில் உருவாக்கிய கடுகு விதையைப் போன்ற ஜீவ மன்னா தினமஞ்சரி பெரிய விருட்சமாக வளர்ந்ததையும் அதற்கூடாக தேவ இராஜ்யம் வளர்ச்சி பெற்றதையும் காண்கிறேன். தேவ பிள்ளைகளே! வெளிநாடுகளுக்கு கடந்து செல்லும் எங்கள் ஜீவமன்னா தினமஞ்சரி தேவனின் மகிமையான வார்த்தைகளை கேட்க முடியாதிருக்கும் காதுகளை திறக்கச் செய்து, ஆத்மீக கண்களைத் திறக்கச் செய்து வாழ்க்கையில் பெரிய மாற்றங்களையும், அற்புதங்களையும் காணச் செய்கின்றது. இவ்வளவு காரியங்களையும் எமது மகத்தான தேவனே முன் சென்று வழி நடத்துவதால் அவருடைய நாமம் எத்திசையிலும் மகிமையடைவதாக!

போதகர்.ஏ.ஜே.ஜோசப்

**ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!**

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்


போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
**விலாசத்தை அனுப்பவும்**

R/N:- QD/66/NEWS/2015

**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**
இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு — 14.
☎ 011-2334865 ✆ 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.